# வாழ்க்கையில் வெற்றிப்பெற்றவர்களின் கதைகள்

பிஎல். முத்துக்குமரன்

# வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் கதைகள்

*சுய முயற்சியால் முன்னேறி வெற்றிகண்ட பத்தொன்பது பிரபலமானவர்களின் கதைகள்*

பிஎஸ். முத்துக்குமரன்

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி,
அண்ணா நகர் மேற்கு,
சென்னை - 600 040

# நூல் பற்றிய விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் கதைகள் |
| ஆசிரியர் | : | பிஎல். முத்துக்குமரன் |
| மொழி | : | தமிழ் |
| வெளியீட்டு நாள் | : | செப்டம்பர் 2002 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| தாள் | : | 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18.5 செ.மீ. ஓ 12.5 செ.மீ. |
| பக்கங்கள் | : | 96 |
| வெளியிடுவோர் | : | முல்லை பதிப்பகம்<br>323/10, கதிரவன் காலனி<br>அண்ணா நகர் மேற்கு,<br>சென்னை – 40. |
| நூல் கட்டு | : | தாள் அட்டை |
| பொருள் | : | வாழ்க்கை வரலாற்று கதைகள் |
| அச்சிட்டோர் | : | ஜியான் பிரிண்டர்ஸ்<br>சென்னை – 28. |

விலை : ரூ . 20.00

# முன்னுரை

பல்வேறு சோதனைகளுக்கு ஆட்பட்டு தன்னுடைய சுயமுயற்சியால் கடைசியில் வெற்றி வாய்ப்பைப் பெற்ற பத்தொன்பது பிரபலமானவர்களின் கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. வாழ்க்கையில் வெற்றி பெறத் துடிக்கும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூல்.

*பிஎல் முத்துக்குமரன்*

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கோடீஸ்வரர் சொன்ன பத்து கொள்கைகள் | – | 5 |
| 2. | ஏழ்மையைப் போக்க இலக்கியச் சேவை செய்தார் | – | 9 |
| 3. | ஒரு புத்தகத்தை வாங்க இயலாதவர் | – | 14 |
| 4. | பிரபல விஞ்ஞானி–பள்ளியில் மக்கு | – | 19 |
| 5. | பணத்தை எப்படிச் சமாளிப்பது | – | 23 |
| 6. | உழைத்து உழைத்து பணத்தை குவித்தார் | – | 27 |
| 7. | திறமையாகச் செய்தால் வெற்றி பெறலாம் | – | 33 |
| 8. | படிப்பினால் பதவி பெற்றவர் | – | 37 |
| 9. | கனவில் கண்ட கடை | – | 43 |
| 10. | 'பணத்தை எப்படிச் செலவழிப்பது' என்று தெரியாதவர் | – | 48 |
| 11. | உலகம் அதிசயிக்கத்தக்க செயல்புரிந்தவர் | – | 52 |
| 12. | விடாமுயற்சியால் வெற்றி பெற்றவர் | – | 57 |
| 13. | இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை திணறச் செய்தவர் | – | 62 |
| 14. | துன்பத்திலே இன்பம் காண்பவர் | – | 67 |
| 15. | விரும்பாத கதை வெற்றியைத் தந்தது | – | 71 |
| 16. | கப்பலில் வேலை செய்தவர் கதை எழுதினார் | – | 75 |
| 17. | வேடிக்கையான கதை ஆசிரியர் | – | 80 |
| 18. | தாய் கண்ட கனவு மகனால் பலித்தது | – | 85 |
| 19. | சிறையிலே சிந்தித்து ஆசிரியர் ஆனார் | – | 90 |

# 1

# கோடீஸ்வரர் சொன்ன பத்து கொள்கைகள்

வாழ்க்கையில் வெற்றிபெற ஒவ்வொருவரும் மிகுந்த துன்பப் படவேண்டும். அப்படிச் செய்யாமல் ஏனோ தானோ என்றிருந்தால் எவரும் வெற்றி பெறவே முடியாது. உதாரணமாக ராக்பெல்லர், வாழ்க்கையில் வெற்றி பெற்றதைப் பாருங்கள்: இரண்டு டாலர் கூலிக்காக முப்பது மணி நேரம் உருளைக்கிழங்கு வயலில் வேலை செய்த ராக்பெல்லர், பிற்காலத்தில் உலகிலே கோடீஸ்வரராக பிரபலம் அடைந்ததற்கு அவருடைய தளராத உழைப்புத்தான் முக்கிய காரணமாகும்.

ராக்பெல்லர் ரொம்பவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். விவசாயத் தொழிலில் அவருக்கு நன்கு ஆர்வம் இருந்தது. வாழ்க்கையை நடத்த அவர் முதலில் உருளைக்கிழங்கு வயலில் வேலை செய்து வந்தார். முப்பது மணிநேரம் வயலில் அவர் வேலை செய்தால் இரண்டு டாலர்



கூலி கிடைக்கும். வேலை அதிகமாகவும் கூலி குறைவாகவும் இருக்கிறதே என்று அவர் பார்க்கவில்லை. அதற்குப்பதில் தம்முடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்.

உருளைக்கிழங்கு வயலில் வேலை போன பிறகு அவர் பல தொழில்களைச் செய்திருக்கிறார். ஒவ்வொரு வேலையிலும் அவர் முழுக் கவனத்தையும் செலுத்தி, செய்யும் தொழிலைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டார். நாளடைவில் அவர் சொந்தமாகவே ஏதாவது தொழில் நடத்தவேண்டும் என்று எண்ணினார். அதன் காரணமாக அவர் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி என்ற ஒரு மோட்டார் எண்ணெய்க் கம்பெனியை ஏற்படுத்தினார். அவருடைய விடா முயற்சியாலும், அயராத உழைப்பாலும் அக்கம்பெனி சிறிது காலத்திலேயே மிகப் பெரியதாக ஆகியது. தற்காலம் அக்கம்பெனி உலகத்தின் எண்ணெய் ஏற்றுமதியையும், விலையையும் நிர்ணயிக்கக்கூடிய வகையில் வளர்ந்து உன்னதமான நிலைக்கு வந்து விட்டது.

ராக்பெல்லர், வாழ்க்கையில் தாம் வெற்றி பெற்ற தற்குக் கடைப்பிடித்த முறையை அவரே கூறிருக்கிறார். அதை ம்ற்றவர்களும் பின்பற்றி, எல்லோரும் அவரைப் போல் முன்னுக்கு வரவேண்டும் என்று விரும்பினார். அதற்காக அவர் எங்கு சென்றாலும் தாம் வெற்றி கொண்ட ரகசியத்தை பிரசாரம்செய்து கொண்டிருந்தார்.

*ராக்பெல்லரின் பத்து கொள்கைகள்:*

1. வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லுங்கள்
2. உண்மையாகவும், நம்பிக்கையுடனும் இருங்கள்.
3. மனதைத் தளர விடாதீர்கள்.
4. உண்மையைக் கடைப்பிடியுங்கள்.
5. நீங்கள் இல்லாவிட்டால், முதலாளிக்குப் பெருத்த நஷ்டம் என்று அவர் எண்ணும் படியாகச் சாமர்த்தியமாக வேலையைச் செய்யுங்கள்.
6. சிறு உத்தியோகத்தில் சேர்ந்து பெரிய பதவிக்கு வரவேண்டும்.
7. பிறர், உங்களிடம் எதிர்பார்ப்பதை விட அதிகமாகச் செய்யுங்கள்.
8. செய்யும் தொழிலைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.
9. கஷ்டப்பட்டு வேலை செய்யாவிட்டால் வாழ்க்கையில் சந்தோஷத்தையே காண முடியாது.
10. விளையாட்டுகளில் மனதை ஓடவிடக்கூடாது.

இந்தப் பத்து விஷயங்களையும் ஒருவர் கடைப் பிடித்தால் கட்டாயம் வாழ்க்கையில் வெற்றி பெறுவர் என்று ராக்பெல்லர் நம்பிக்கையுடன் கூறியிருக்கிறார்.

# 2

# ஏழ்மையைப் போக்க இலக்கிய சேவை செய்தார்

அப்டன் ஸிங்க்ளர் என்ற பிரபல கதாசிரியரை ஒரு பத்திரிகை நிருபர் காணவந்தார். நிருபர், கதாசிரியரைப் பாராட்டும் தன்மையில் "நீங்கள் ஆங்கில இலக்கியத்திற்கு அபாரமான சேவை செய்கிறீர்கள்" என்றார்.

அப்டன் ஸிங்க்ளர் சிரித்துக்கொண்டு "அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னுடைய வறுமையைப் போக்கிக் கொள்ளவே நான் இலக்கிய சேவை செய்கிறேன்" என்றாராம்.

அப்டன் ஸிங்க்ளர் கூறியதில் பொய்யே இல்லை. அவர் இலக்கிய சேவை செய்யப் புகுந்ததே தம் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான். அதே நோக்கத்தில்தான் அவர் இடைவிடாமல் நாவல், சிறுகதை கட்டுரை முதலியவற்றை எழுதி வந்தார்.

அப்டன் ஸிங்க்ளர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் சாராயக் கடையில் வேலையில் இருந்தார். அங்கு வேலை செய்து வந்ததன் பலனோ என்னவோ அவரும் ஒரு பெரிய குடிகாரராகிவிட்டார். இதனால் ஏற்கனவே வறுமையில் கஷ்டப்படும் குடும்பம் மேலும் அவஸ்தைப் படலாயிற்று. இந்தக் காரணத்தால் அப்டன் ஸிங்க்ளர் பள்ளிக்குக் கூடப் போக முடியவில்லை. அதனால், வீட்டில் தாயாரிடமே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார். ஆரம்பப்பாடங்களைக் கற்றதும், அவர் தன் கைக்கு கிடைக்கும் புத்தகங்களைப் படிக்கலானார். இப்படியே பெரிய பெரிய மேதைகளின் புத்தகங்களைப் படித்து முடித்தார். இச்சமயத்தில் அவருக்கு, பள்ளிக்கு செல்ல வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. படிப்பில் ஓரளவு தேர்ந்திருந்ததால், அவர் உயர்தரவகுப்பிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனால், பள்ளிக்கு சம்பளம் கட்டவேண்டுமே, என்ன செய்வது? இதற்காக அப்டன் ஸிங்க்ளர் மனம் தளரவில்லை. நகைச்சுவை துணுக்குகள் எழுதி பல பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார். அவர் அனுப்பும் பத்துத் துணுக்குகளில் நிச்சயம் இரண்டு துணுக்குகளாவது பத்திரிகையில் பிரசுரமாகும். அதற்காக அவர்கள் அளிக்கும் சன்மானத்தைக்கொண்டே அவர் பள்ளிச் சம்பளத்தைக் கட்டி விட்டு, தம்முடைய செலவையும் பூர்த்தி செய்து கொண்டு வந்தார்.



உயர்தரப் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் சென்றதும் அப்டன் ஸிங்க்ளர் நாவல்கள் எழுதத் தொடங்கினார். பகல் வேளையில் கல்லூரிப் படிப்பு. இரவில் நாவல் எழுதும் வேலை, இப்படியுமாக, அவர் தம்முடைய படிப்பிற்கும், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குமாக முதலிலிருந்தே இலக்கியத்தின் உதவியை நாடினார்.

அப்டன் ஸிங்க்ளர் பெரிய கதாசிரியராக ஆன பிறகு, தம்மைப்போல் கஷ்டப்படும் எழுத்தாளர்களை மறந்து விடவில்லை. அவர் சம்பாதித்த பணத்தைக் கொண்டே ஒரு காலனி ஏற்படுத்தி அங்கே பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பலரை வந்து குடியேறியிருக்கச் செய்தார்.

அப்டன் ஸிங்க்ளர்இலக்கிய மேதை மாத்திரம் அல்ல. சிறந்த சீர்த்திருத்தவாதியும்கூட. அவருடைய குடும்பம் வறுமையினால் கஷ்டப்பட்டது என்பதுடன், அவருடைய தகப்பனார் குடிகாரராக இருந்ததும் ஒரு காரணம் அதனால் அவர் குடியை வெறுத்தார். மதுபானம் செய்வதையே ஒழிக்கவேண்டும் என்ற கொள்கை உடையவர்அப்டன் ஸிங்க்ளர். சோஷியலிஸ்டு கட்சியில் அப்டன் ஸிங்க்ளருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அக்கட்சியின் கொள்கைகள் அவருக்கு பிடித்திருந்தது அதனால் அதில் சேர்ந்து சேவை புரியலானார்.

வறுமையில் கஷ்டப்பட்டபோது அப்டன் ஸிங்க்ளர் ஒரு சாதாரண இடத்தில வசித்து வந்தார். ஆனால்,

பணக்காரரான பிறகும்கூட, அவருக்கு அம்மாதிரியான சிறு இடத்தில் வசிக்கத்தான் அதிக பிரியம், இதற்கு மற்றொரு காரணத்தையும் கூறலாம். அவர் ஏராளமாகப் பணம் சம்பாதித்த பிறகு ஒரு பெரிய மாளிகையை வாங்கினார். அதில் போய்ச் சில நாட்கள் தங்கினார். ஆனால், ஒருநாள் அவர் குடும்பத்துடன் வெளியே போயிருக்கும் சமயம் வீட்டில் நெருப்புப் பற்றிக் கொண்டு விட்டது. அப்டன் ஸிங்க்ளர் வெளியிலிருந்து வருவதற்குள் வீடே எரிந்து சாம்பலாகிவிட்டிருந்தது. இதைக் கண்ட பிறகு, அப்டன் ஸிங்க்ளர் பெரிய மாளிகையில் குடியிருப்பதைக்கூடக் குறைத்துக் கொண்டார். அதேபோல, வாழ்க்கையில் ஆடம்பரச் செலவுகளை எல்லாம் வெறுத்தார் ஆடம்பரமாகச் செலவு செய்வதை மிச்சப்படுத்தினால் அதை வறுமையால் கஷ்டப்படுபவர்களுக்குக் கொடுக்கலாமே என்பது அவர் எண்ணம்.

# 3

## ஒரு புத்தகத்தை வாங்க இயலாதவர்

டாக்டர் ஏ.எம். ரோஸ் என்பவர் எழுதிய "கனடா தேசத்துப் பறவைகள்" என்ற புத்தகத்தை வாங்கவே, எர்னஸ்ட் தாம்சன் ஸெடான் என்பவர் ரொம்பவும் கஷ்டப்பட்டவர். 90 செண்ட் விலையுள்ள அந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்கவேண்டும் என்ற அவா அவருக்கு அளவு கடந்து இருந்ததால் அவர் கஷ்டங்களைப் பொருட்படுத்தவில்லை. மிகுந்த முயற்சியின் பேரில் அவர் அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்தார்.

இவ்வளவு வறுமை நிலையிலிருந்த ஸெடான் பிற்காலத்தில், ஒரு பிரபல பிராணி நூலாசிரியராகவும், பிராணிகளை வரையும் சிறந்த சித்திரக் காரராகவும் ஆனார் என்றால், அவருடைய ஆவல் எத்தகையது என்பதை பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஸெடானுடைய தகப்பனார் ஒரு காலத்தில் பெரிய பணக்காரராக இருந்தார். அவருக்குச் சொந்தமாகப் பல



கப்பல்கள் இருந்தன. ஸெடானுக்கு ஐந்து வயதாக இருக்கும்போது, அவருடைய தகப்பனாருக்கு, வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அதன் காரணமாக எல்லா சொத்துக்களும் பறிபோயிற்று. வறுமை நிலையை எய்திய ஸெடானின் குடும்பம் கனடா தேசத்தை விட்டு வெளியேறி டோரன்டோவுக்கு சென்று குடிபுகுந்தது. அங்கு சென்ற பிறகு ஸெடான் பள்ளியில் படிக்கத் தொடங்கினார். அவருக்குப் பிராணி நூலில் அதிகப் பற்றிருந்தது. ஆனால் அவருடைய தகப்பனாருக்கோ அது பிடிக்கவில்லை. பிராணி நூல் படிப்பின் மூலம் எதிர்காலத்தில் யாதொரு பலனும் ஏற்படாது என்று அவர் கருதினார் இச்சமயத்தில்தான் முன்னர் குறிப்பிட்டதுபோல் டாக்டர் ரோஸுடைய பறவை நூல் வெளியாயிற்று. மிகவும் கஷ்டப்பட்டு அதை வாங்கிய ஸெடானுக்கு, அதைப் படித்தபிறகு பிராணிகள் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தவேண்டும் என்று தோன்றிற்று. அதற்காக அருகில் உள்ள காடுகளுக்கு அடிக்கடி அவர் போய்விடுவார். அங்கு பறவைகளையும் பிராணிகளையும் கண்டு அகமகிழ்வார். அவருடைய செய்கையை தகப்பனார் ரொம்பவும் கண்டித்துப்பார்த்தார். அதனால் ஒன்றும் பயனில்லை என்றதும் பையனை வேறு வழியில் திருப்ப நினைத்தார். பையனைச் சித்திரக்காரனாக ஆக்கிவிட வேண்டும என்ற எண்ணத்தில் இங்கிலாந்துக்கு அவரை அனுப்பினார். வாரம் மூன்று டாலர்கள். அவருடைய செலவுக்காக அனுப்பி வந்தார்.

இங்கிலாந்தை அடைந்த ஸெடான், வாழ்க்கையை மிகவும் சிக்கனமான முறையில் நடத்திக் கொண்டிருந்தார். அவர் சித்திரத் தொழிலை கற்றுக்கொண்டே பிராணி நூல் ஆராய்ச்சியையும் நடத்திக் கொண்டிருந்தார். இங்கிலாந்தில பிராணிகள் சரித்திர நூலகம் ஒன்றிருந்தது அதில் சாதாரணமானவர்களை அனுமதிப்பதே இல்லை. அந்த நூலகம் உலகத்திலேயே மிகப் பெரியது, உன்னதமானது என்று எல்லோரும் சொல்வதைக் கேட்ட ஸெடான் அதில் தான் ஒரு உறுப்பினராக வேண்டும் என்று முயற்சிசெய்தார். அதற்காக இங்கிலாந்தின் பிரதமமந்திரிக்கும், சக்கரவர்த்திக்கும் கூடக் கடிதம் எழுதினார். அவருடைய ஆர்வத்தைக் கண்ட பிரதமமந்திரி நூலக நிர்வாகிகளுக்கு அவரை அனுமதிக்கும்படி கடிதம் எழுதினார்.

இந்த நூலகத்திலிருந்து தான் ஸெடானின் வாழ்க்கையே உதயமாயிற்று எனலாம்.

அவர், பல வருஷங்கள் பிராணிகளைப் பற்றி ஆராய்ச்சி நடத்தினார். புதிய புதிய பறவைகள், பிராணிகள் முதலியவற்றைக் கண்டுபிடித்தார். அவைகளைப் பற்றி புத்தகம் ஒன்றை எழுதினார். புத்தகத்தில் உள்ள சித்திரங்கள் எல்லாம் அவராலேயே எழுதப்பட்டவை. அப்புத்தகம் வெளிவந்ததிலிருந்து ஸெடானின் புகழ்

உலகமெங்கும் பரவலாயிற்று. தற்காலம் பிராணிகளைப் பற்றியவரை, அவரை ஒரு அத்தாட்சிக் காரராக உலகத்தவர் மதிக்கின்றனர்.

அன்று ஒரு புத்தகத்தை வாங்கக் கஷ்டப்பட்ட ஸெடான், பிறகு பல புத்தகங்களுக்கு ஆசிரியராகி இருக்கிறார். அத்துடன் பெரிய பணக்காரராகவும் இருந்து வருகிறார். சமீபத்தில்தான் அவர் தமது 42வது புத்தகத்தை எழுதி முடித்தார்.

# 4

## பிரபல விஞ்ஞானி பள்ளியில் மக்கு

கிராமபோனைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தாமஸ் எடிசனுக்கு ஞாபகசக்தி துளிகூடக்கிடையாதாம் பள்ளியில் படிக்கும்போது அவரை ஆசிரியர்கள் 'மக்கு, என்று சொல்வார்கள். ஆசிரியர்கள் சொல்லிக்கொடுப்பதை அவர் கேட்ட நிமிஷமே மறந்து விடுவாராம். இதனால் ஆசிரியர்களுக்கு பெரிய பிரச்சனையாகி விட்டது. இதை அவர்கள் எடிசனுடைய பெற்றோர்களிடம் சொன்னார்கள். அவர்கள் உடனே டாக்டரைக் கூப்பிட்டு எடிசனுக்கு இருக்கும் குறையைச் சொன்னார்கள். எடிசனை பரிசோதனை செய்த டாக்டர்கள், மூளைக்கோளாறு இருக்கிறது என்று கூறினார்கள். இதனால் பெற்றோர்கள் பெரும் கவலையாகி விட்டது. எடிசன் வாழ்க்கையிலேயே மூன்று மாதம்தான் பள்ளிக்குச் சென்றிருக்கிறார். பிறகு அவர் படித்து, கற்றுக்கொண்டதெல்லாம் அவருடைய தாயாரிடம் தான் அவருடைய தாயார் பிள்ளைக்கு இருக்கும் மூளைக் கோளாறை எண்ணி பள்ளிக்கு அனுப்பாமல் தானே



பாடங்களைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பிறகு எடிசன் பல புத்தகங்களைப் படித்து அறிந்தார். விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தேவையான படிப்பை படித்து நன்கு கவனம் வைத்துக் கொள்ளப்பழகிக்கொண்டார். எடிசன் பல ஆராய்ச்சிகள் நடத்தலானார். 1887 ம் வருடம் நவம்பர் மாதம் தம் ஆராய்ச்சியின் மூலம் கிராமபோனைக் கண்டுபிடித்தார்.

எடிசன் இளமையில் தான் அப்படியிருந்தார் என்பதில்லை. பெரியவரான பிறகும் கூட அவருக்கு கவனம் சரியாக இருப்பதே இல்லை. ஒரு சமயம் அவர் வரி கட்டுவதற்காக வரி செலுத்தும் அலுகவகத்துக்குச் சென்றிருந்தார். மக்கள் பணம் செலுத்த வரிசையாக நின்றிருந்தனர். எடிசனும் வரிசையில் நின்றார். வெகு நேரத்துக்குப்பின், அவர் பணம் கட்டவேண்டிய இடத்தை அடைந்தார் பணத்தை பெற்றுக்கொண்ட அதிகாரி, அவர் பெயரைக் கேட்டாராம். எடிசனுக்கு அப்போது தம்முடைய பெயரே மறந்து விட்டதாம். அவர் அப்படி தவிப்பதைக் கண்டு பக்கத்தில் இருந்த அவருடைய அடுத்த வீட்டுக்காரர் அவர் பெயரைச் சொன்னாராம் அதன் பிறகுதான் அவருக்குத் தம்முடைய பெயர் தாமஸ் எடிசன் என்பது நினைவுக்கு வந்ததாம்.

எடிசன் எப்பொழுதுமே தம்முடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பார். எதையாவது

ஒன்றைப்பற்றி அவர் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் சாப்பிடக்கூட கவனமிருக்காது. இப்படித்தான் ஒருசமயம் எடிசன் இரவு முழுவதும் தனது ஆராய்ச்சி சாலையில் வேலை செய்து கொண்டிருந்தார். பொழுது விடிந்ததும் அவர் காலை ஆகாரத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார். ஆகாரம் வர தாமதமாகி விட்டதால் அவர் அப்படியே சோபா ஒன்றில் சாய்ந்து தூங்கிவிட்டார்.

எடிசனுக்கு காலை ஆகாரம் டீ முதலியவை ஒரு தட்டில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. அவர் தூங்கிக் கொண்டிருந்ததால் வேலைக்காரன் அவரை ஆகாரம் சாப்பிடுவதற்கு எழுப்பவில்லை. அச்சமயம் அங்கிருந்த அவருடைய உதவியாள் ஒருவன் ஆகாரங்களில் சிலவற்றை முதலில் சாப்பிட்டானாம். பிறகு எடிசனை ஏமாற்ற எண்ணி வந்திருந்த ஆகாரம் அத்தனையையும் சாப்பிட்டு விட்டுத் தட்டை காலியாக அவர்முன் வைத்து விட்டானாம்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு, எடிசன் கண் விழித்து பார்த்தார். எதிரே இருந்த மேஜைமீது ஆகாரத் தட்டு காலியாயிருந்தது. அதை கண்ணுற்ற எடிசன் தாம் ஆகாரங்களை சாப்பிட்டுவிட்டதாகவே எண்ணி விட்டாராம்.

சிறந்த விஞ்ஞானியான எடிசன் இவ்வளவு ஞாபக மறதியாக இருந்தார் என்றால் யாராவது நம்புவார்களா?

# 5

## பணத்தை எப்படிச் சம்பாதிப்பது?

பத்து லட்சம் டாலர் ஒரு வியாபாரத்தில் நஷ்டமடைந்தவன் "எப்படிப் பணம் சம்பாதிப்பது" என்று ஒரு புத்தகம் எழுதினால் எப்படியிருக்கும்? அந்தப் புத்தகத்தை யாராவது வாங்குவார்களா? அல்லது அவர் சொல்லியிருப்பதையாவது நம்புவார்களா? இப்படி நடக்குமா என்பார்கள்; ஆனால், நடந்து விடுகிறதே! பி.டி. பேர்னம் என்பவர் கடிகாரம் உற்பத்தி செய்யும் தொழிலை ஆரம்பித்தார். கடிகார உற்பத்தி மூலம் அவருக்கு லாபம் ஏற்படுவதற்குப் பதில் பத்து லட்சம் டாலர் நஷ்டம் ஏற்பட்டுவிட்து. பணம் நஷ்டம் அடைந்ததும் அவர் மனமுடைந்து போனார். அவர் தம் மனத்தைத் தேற்ற "எப்படி பணம் சம்பாதிக்கலாம்? என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினார். அதை அச்சடித்து ஒரே நாளில் எராளமான பிரதிகளையும் விற்றார் அதுவரை எல்லா வகையிலும் தோல்வி கண்ட அவருக்கு அந்தப் புத்தகம் எழுதிய பிறகே பணம் சம்பாதிக்கும் வழி தெரிந்தது.


HOW TO
INK

பேர்னம் அமெரிக்காவைச் சேர்ந்தவர். அவர் இளைஞராக இருக்கும் போது, அவரிடம் ஐந்து ஆயிரம் டாலர் இருந்தது. அதைக் கொண்டு ஏதாவது வியாபாரம் செய்யலாம் என்று எண்ணினார். ஒரு நண்பனுடன் சேர்ந்து இயந்திரங்களுக்கு உபயோகிக்கும் கிரீஸ் என்ற எண்ணெயை உற்பத்தி செய்ய முற்பட்டார், அவருடன் கூட இருந்த நண்பன் பணத்தை மோசம் செய்து அவரை ஒட்டாண்டியாக்கிவிட்டுச் சென்றான். தோல்வியும் நஷ்டமும் கண்ட பேர்னம் மனம் உடையாமல் சிலரை நாடி பணம் சம்பாதித்தார். அதைக்கொண்ட கெடி காரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை வைத்தார். அதில்தான் பத்து லட்சம் டாலர் நஷ்டம் ஏற்பட்டது. அதன் பிறகுதான் அவர், "எப்படிப் பணம் சம்பாதிப்பது?" என்ற புத்தகத்தை எழுதினார் இந்த புத்தகத்தின் மூலம் அவருக்கு 200 டாலர் கிடைத்தது. அதைக் கொண்டு சர்க்கஸ் கம்பெனி ஒன்றை அமைத்தார். அதில் பல தந்திரங்களை கையாண்டார். விளம்பரங்களை ஒரு புது முறையாகச் செய்வார். அதைக் கண்டு மக்கள் ஏராளமாகக் கூடி விடுவார்கள். ஆனால், உண்மையில் அவர் விளம்பரம் செய்தபடி இருக்காது. இதை அவர் வெகு நகைச்சுவையாக எடுத்துக் காட்டுவார். அதாவது, தான் செய்வது மோசமானதுதான் என்பதை சொல்லாமல் சொல்வார். ஆனால் மக்கள் அவருடைய நகைச்சுவை முறையைக் கண்டு அவர் செய்த மோசத்தை மறந்து விடுவார்கள்.

பேர்னம் சர்க்கஸ் கம்பெனியையும் சிக்கனமான முறையிலேயே நடத்தி வந்தார். மிருகங்களை வைத்திருப்பவர்களையும், சர்க்கஸ் வேலை செய்பவர் களையும் கூட்டி, கூலிக்கு அமர்த்திக்கொண்டு கம்பெனி நடத்தி வந்தார். அவர் இப்படிச் சிக்கனமாகத் தொழில் நடத்தியதின் மூலம் வெகு விரைவிலேயே பெரிய பணக்காரர் ஆனார், அவர் தம்முடைய எழுபதாவது வயதில் சொந்தத்திலேயே மிருகங்களை வாங்கி, சம்பளத்திற்கு ஆட்களை அமர்த்தி "பேர்னம் அண்டு பைலி சர்க்கஸ் கம்பெனி" ஒன்றை ஏற்படுத்தினார்.

ஆரம்பத்தில், பேர்னம் தொழிலில் நஷ்டமடைந்தாலும் பிற்காலத்தில் நஷ்டம் என்ற பேச்சே அவர் அகராதியில் இல்லாமல் செய்துகொண்டார். அவருக்கு இந்த சாமர்த்தியம் எற்பட்டதே "எப்படி பணம் சம்பாதிப்பது?" என்ற புத்தகம் எழுதிய பிறகு தான் என்று சொல்ல வேண்டும்.

# 6

# உழைத்து உழைத்து பணத்தை குவித்தார்

யுத்த காலத்தில் எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஏழையாக இருந்தவன் லட்சாதி பதியாகி இருக்கிறான். லட்சாதிபதி பிச்சைக்காரனாகி இருக்கிறான். இதெல்லாம் வியாபாரத்தில் ஈடுபட்டுத்தான். ஆனால் போர் மூண்டதின் காரணமாக, ஒருவர் பெரிய கப்பல் கட்டும் முதலாளியாகவும் நிபுணராகவும் ஆனார் என்பது அதிசயமானது. அதிலும் கப்பல் தொழிலைப் பற்றியே தெரியாதவர் அப்படி ஆவதென்றால் நம்பமுடியுமா?

கப்பல் தொழிலில் பிரபலமாகியிருக்கும் அவருடைய பெயர் ஹென்ரிஜே கெய்ஸர் அவருடைய தகப்பனார் ஜெர்மானிக்காரர். ஆனால் அவர் தாய்நாட்டை விட்டு வெகு காலத்துக்கு முன்னதாகவே அமெரிக்கா வந்து குடியேறி விட்டார். கெய்ஸர் பிறந்ததே அமெரிக்காவில்தான். தகப்பனார் செருப்பு தைக்கும் தொழிலைச் செய்து



கொண்டிருந்தார். அத் தொழில் மூலமே அவருக்கு நிறையப் பணம் கிடைத்து வந்ததது. கெய்ஸர் அவருக்கு ஒரே மகன். அக்காரணத்தால் மிகவும் செல்லமாகவே வளர்ந்தார்.

கெய்ஸருக்குப் இளமையிலிருந்தே அளவற்ற ஆசையும், எதிலும் சலிப்பின்றியுமிருந்தார். பதினாறு வயதுவரை பள்ளியில் படித்தார். பிறகு நியூயார்க்கில் உள்ள ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கு, சாமான்களை வீடுகளுக்குக் கொண்டு கொடுக்கும் வேலை அவருக்கு அளிக்கப் பட்டது. கெய்ஸர் பகல் வேளைகளில் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டே இரவு வேளைகளில் போட்டோத் தொழிலைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்தார் போட்டோ தொழிலில் ஒருவாறு முன்னேறிய பிறகு கெய்ஸர் மனதில் ஒரு புது யோசனை உதித்தது. பூந்தோட்டம், நீர்வீழ்ச்சி, பெரிய அழகான கட்டிடங்கள் முதலியவற்றைப் படம் பிடித்து பல மாதிரிகளில் விற்றால் என்ன என்று யோசித்தார். உடனே அதைச் செய்ய முற்பட்டார். அவருடைய முயற்சிக்கு ஆரம்பத்திலேயே நல்ல வரவேற்பு ஏற்பட்டது. இதைக் கண்டு, கெய்ஸர் மனம் அளவற்ற குதூகலத்தில் மூழ்கியது. போட்டோ தொழிலிலேயே பூரணமாக ஈடுபட எண்ணி கம்பெனி வேலையை விட்டு விலகினார்.

அமெரிக்காவில் பல இடங்களில் போட்டோ பிடிக்கும் கம்பெனிகளை நிறுவினார். இதன் மூலம் அவருடைய வருவாய் அதிகமாகியதுடன் பெயரும் பிரபலம் அடைந்தது. கெய்ஸர் அத்துடன் இருக்கவில்லை. அவர் போட்டோ தொழிலை ஒருவாறாக நடத்த ஏற்பாடு செய்து முடிந்ததும், ஒரு சிமென்ட் கம்பெனியில் வியாபார ஏஜெண்டாக வேலையில் அமர்ந்தார். இக் கம்பெனியில் அவர் திறமையாக வேலை பார்த்து, அதிக ஊதியம் பெற்றார். அவருக்குக் கிடைத்த ஊதியத்தை அவர் செலவு செய்யாமல் சிமென்ட் மூட்டைகளை வாங்கி பத்திரப் படுத்தினார். அதைத் தனியே வியாபாரமும் செய்து வந்தார். இச்சமயத்தில் தான் சிமென்டுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. அப்பொழுது அமெரிக்காவிலேயே கெய்ஸர் ஒருவரிடந்தான் அதிகமாக சிமென்ட் இருந்தது. அதைப் பலர் விலைக்குக் கேட்டும் கெய்ஸர் விற்க மறுத்துவிட்டார். கடைசியாக சிகாகோ நகரத்தைச் சேர்ந்த பிரபல கட்டிட காண்டிராக்ட் கம்பெனி ஒன்று அவரை தமது கம்பெனியில் பங்குதாரராகச் சேர்த்துக்கொண்டது. அக்கம்பெனிக்கே கெய்சர் தாம் சேர்த்து வைத்திருந்த சிமென்ட் மூட்டைகளை எல்லாம் நல்ல லாபத்திற்கு விற்றார். இக்கம்பெனி மூலம் கெய்ஸர் கட்டிட வேலைகளைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டார். பெரிய பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு காண்டிராக்ட் எடுக்கச் சொல்லி, தாமே நேரில் இருந்து கட்டி முடித்தார் பிறகு அந்தக் கம்பெனியிலிருந்து விலகி, சொந்தமாகவே

கட்டிட காண்டிராக்ட் கம்பெனியை ஆரம்பித்தார். இக் கம்பெனி ஆரம்பத்தில் அதிக வசதிகள் பெற்றிருக்கவில்லை. ஆனாலும் கெய்சருடைய சலியா உழைப்பின் காரணமாக வெகு சீக்கிரத்திலேயே அது பிரபலம் அடைந்தது. அதிலிருந்து கப்பல் கட்டும் தொழிலை மேற்கொண்டார். அவர் கப்பல் கட்ட ஆரம்பித்த சமயமும் இரண்டாவது உலக போர் மூண்டதும் சரியாக இருந்தது. அதனால் கப்பல்களுக்கு அதிகக் கிராக்கி ஏற்படலாயிற்று. கெய்ஸர் மனத்தில் ஒரு புது யோசனை உதித்தது சாதாரணமாக, கப்பல் கட்ட எல்லாரும் பின்பற்றும் வழியை அவர் கடைபிடிக்க விரும்ப வில்லை. பழைய முறையினால் கப்பல் கட்டி முடிக்க அதிக நாட்கள் ஆகின்றன. போர் காலத்தில், தாமதமாக வேலை செய்வதால் அபாயம் அதிகரிக்கும் அதை தடுக்கப் புதுவழிகள் தேவை என்று கெய்ஸர் தீவிரமாக சிந்தித்தார். மோட்டார் தொழிற்சாலையில் ஒவ்வொரு சாமானையும் வெவ்வெறு இடங்களில் தயாரிப்பார்கள். பிறகு எல்லாவற்றையும் ஒரு இடத்துக்குக் கொண்டுவந்து பூட்டுவார்கள். அந்த முறையை இதில் பின்பற்ற கெய்ஸர் எண்ணினார். முதலில் இதற்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. பலர் அப்படி முடியவே முடியாது என்றும் கூறினர். ஆனால், கெய்ஸர் அதைப் பொருட்படுத்தாமல், தம் போக்கில் வேலையைச் செய்யலானார். சில மாதங்களிலேயே அவருடைய கப்பல் கட்டும் திறமை மிகப் பிரபலம் அடைந்தது. அமெரிக்க அரசாங்கமே அவருடடைய புரட்சிகரமான யோசனையைக் கண்டு அதிசயித்தது.


கெய்ஸர் பல தொழிற்சாலைகள் நடத்தி வந்தார். பணம் அவரைத் தேடி வந்து குவிந்தது. ஆனாலும், அவர் சலியாமல் வேலை செய்துவந்தார் அவரைப் போலவே அவரிடம் வேலை செய்பவர்களும் சோம்பல் என்பதையே தெரியாதவர்களாக இருக்க வேண்டும். தன்னைப்போல் அவர்களும் முன்னுக்கு வரவேண்டும் என்று கெய்சர் விரும்புவார்.

## 7

# திறமையாகச் செய்தால் வெற்றி பெறலாம்.

எந்த வியாபாரத்தையும் சரியாகச் செய்தால் உலகமெங்கும் பரப்பி விடலாம்; வெற்றியும் பெறலாம். பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்பவும், மலிவாகவும் நீண்ட காலம் உழைக்கக் கூடியதாகவும் சரக்கு இருந்தால் அது அதிவிரைவிலேயே பிரபலம் அடையும் இதனால் செருப்பு வியாபாரம் இப்படி பிரபலம் அடையுமா என்று சந்தேகப் படலாம். அம்மாதிரி சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை அதைக்கூட உலக மார்க்கெட்டில் விற்கலாம் என்பதை தாமஸ் பேட்டா நிரூபித்து விட்டார்.

தாமஸ் பேட்டா மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய முன்னோர்கள் பரம்பரையாக செருப்புத் தைக்கும் தொழிலைச் செய்து வந்தனர். தாமஸ் பேட்டா சிறுவனாக இருக்கும்போது அவருடைய பெற்றோர் செருப்புத் தைப்பதைக் கண்டு ஆத்திரமடைவாராம்.


Bata

இயந்திரத்தை விட மனிதன் கையினாலேயே வேகமாக செருப்பை தைக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அக்காலத்திலேயே ஏற்பட்டது.

தாமஸ் பேட்டாவுக்கு ஐந்து வயதாகி இருக்கும்போது, அவர் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். வெளிநாடுகள் சென்று இயந்திரத்தைக் காட்டிலும் வேகமாகச் செருப்பு தைக்க கற்றுக்கொள்ள முயற்சித்தார். ஊக்கமும் முயற்சியும் இருந்தால் வெற்றி கிட்டாமல் போகுமா? அவர் சில வருடங்களிலேயே வேகமாகச் செருப்பு தைக்கும் நிலையை அடைந்தார். பிறகு ஒரு நண்பர் இருக்குமிடத்தில் 50 பவுன் மூலத்துடன் 1905ம் வருஷம் ஒரு சிறு செருப்புத் தொழிற் சாலையை தொடங்கினார். விடாமுயற்சியின் பலனாக தாமஸ் பேட்டாவின் தொழிற்சாலை நாளடைவில் பெரிதாகிக் கொண்டே வந்தது. முதலில் சில்லறை வியாபாரியாக இருந்த அவர், நாளாவட்டத்தில் பெரிய வியாபாரியாக மாறினார். அத்துடன் மக்களின் மனப்போக்கை அறிந்து, அவர்களுக்குப் பிடிக்கும்படியாக புதுமாதிரியான செருப்புக்களைத் தயார் செய்தார். இதனால் வியாபாரம் மேலும் மேலும் பெருகிக் கெண்டே இருந்தது.

பேட்டாக் கம்பெனி செருப்புக்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டதும், அவர் ஒரு புது முறையைக் கையாண்டார். ஒவ்வொரு நாட்டிற்கும் தயார் செய்து அனுப்புவதை விட, அங்கங்கே ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்தி நடத்தினால்

நன்றாக இருக்கும் மேலும், அத் தேசத்தவர்களுக்கு விருப்பமான முறையில் நயமாகவும் தயார் செய்து கொடுக்கலாம் என்று எண்ணினார். அதன்படியே பல நாடுகளிலும் பேட்டா தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார். இதனால் அந்தநாட்டவர் பலருக்கும் வேலை கிடைக்கலாயிற்று.

பேட்டா, தொழிற்சாலைகள் ஏற்படுத்தியதுடன் நிற்கவில்லை; நாட்டின் பல பாகங்களிலும் தங்கள் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தினார். இப்படிச் செய்ததின் மூலம் அவருடைய சரக்குகளை விற்க வேறு வியாபாரியைத் தேடி அலைய வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

பேட்டா செருப்பு வியாபாரத்தின் மூலம் ஒரு சின்னஞ்சிறு நகரையே ஏற்படுத்தி விட்டார் என்று கூறலாம். பேட்டா செருப்புத் தொழிற்சாலையிருக்கும் பல இடங்களுக்கு 'பேட்டா நகர்' என்றே பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அத் தொழிற்சாலைகளின் லட்சக்கணக்கானவர்கள் வேலை செய்கின்றனர். அவர்களுக்காகவே சாமான் கடைகள், ஹோட்டல்கள், சினிமா–நாடக தியேட்டர்கள் கூட கம்பெனியின் மூலமாகவே நடத்தப்பட்டு வருகின்றன.

# 8

## படிப்பினால் பதவி பெற்றவர்

"மனிதன் தன்னுடைய நாற்பது வயதிற்குள்ளாகவே ஒரு நிலைக்கு வந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் அவனுடைய பிற்கால வாழ்க்கை நன்றாக இருக்கும் இல்லாவிட்டால் அவன் வாழ்க்கை முழுதும் கஷ்டப்பட வேண்டியதுதான்" என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுவர். இதை, ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்பவர் பூரணமாக நம்பக் கூடியவர். அவருக்கு 39 வயது முடியும்வரை அவருடைய வாழ்க்கை ஒரு சரியான பாதைக்கு வரவில்லை. இதனால் அவர் மனம் வருந்தி இனி தாம் முன்னுக்கு வரவே முடியாதோ என்று எண்ணினார். இதை தம்மனைவியிடமும் சொன்னார். அவருடைய மனோ நிலையை அறிந்து அவரது மனைவி அவரைத் தேற்றுவதற்காக சில வார்த்தைகள் சொன்னார் அவர் சொன்ன வார்த்தைகள் எதிர்பாராத வகையில் பலித்தும் விட்டது. அதுவரை சட்டம் படித்துவிட்டு, ஒரு டாலர்கூட சம்பாதிக்காத வெண்டல் எதிர்பாராத வகையில் ஹார்வர்டு



சட்டக்கல்லூரியில் சட்டப் பேராசிரியராக அழைக்கப்பட்டார். மாதம் 900 டாலர் சம்பளம் என்று கூறினார். இதைக் கேட்டதும் வெண்டலுக்கு நம்பவே முடியவில்லை. இம்மாதிரியான பெரிய பதவி தமக்குக் கிடைக்குமா என்ற ஆச்சரியப்பட்டார்.

வெண்டலின் பள்ளிப் படிப்பு முடிந்ததும் சட்டப் படிப்புப் படிக்க முனைந்தார். இதைக்கண்ட அவரது தகப்பனார் மனம் வருந்தினார். அந்தக் காலத்தில் அமெரிக்காவில் வக்கீல் உத்தியோகம் செய்பவர்களுக்கு வருமானம் அதிகமாகக் கிடைக்காது. மேலும், அப்போது வெண்டலுடைய குடும்பம் மிகவும் வறுமையில் இருந்து வந்தது. அதனால், வருமானம் இல்லாத வக்கீல் படிப்பை விட்டுவிட்டு, வேறு படிப்பில் கவனம் செலுத்துமாறு வெண்டலிடம் அவர் தகப்பனார் கூறினார். அந்தச் சமயம் அமெரிக்காவில் உள் நாட்டு கலகம் மூண்டது அதற்கு இளைஞர்கள் தேவை என்று அரசாங்கம் அறிவித்ததும் வெண்டல் சட்டப் படிப்பை விட்டு ராணுவத்தில் சேர்ந்தார்.

வெண்டல் தம் வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்; எவருக்கும் அஞ்சாதவர்; தயவு தாட்சண்யமின்றி நடுநிலையிலிருந்து எதையும் செய்யக்கூடியவர். அவருடைய பயமற்ற தன்மையையும், வேலையில் இருந்த ஆர்வத்தையும் விளக்க ஒரு சம்பவத்தைக் கூறலாம். உள்நாட்டு கலகத்தின்போது அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த

லிங்கோலினுடைய அரண்மனையைப் பாதுகாக்கும் படையில் வெண்டல் இருந்தார். ஒரு நாள் ஜனாதிபதி லிங்கோலின் தம்முடைய அரண்மனை மாடியின் முற்பகுதியில் நின்று கொண்டிருந்தார். அப்போது கலகக்காரர்கள் அரண் மனையின் எதிரில் துப்பாக்கி சகிதமாகக் கூடியிருந்தனர். இதனால் ஜனாதிபதிக்கு அபாயம் ஏற்படலாம் என்று பாதுகாப்பான இடத்திற்குப் போகும்படியும் அவரிடம் ஒரு ராணுவ அதிகாரி கூறினார். ஆனால் ஜனாதிபதி போக மறுத்துவிட்டார். ராணுவ அதிகாரி வேறு வழியின்றி தாம் வந்த வழியே திரும்பிப் போய்விட்டார். ஆனால் கலகக்காரர்கள் துப்பாக்கியால் ஜனாதிபதியை சுடுவதற்கு குறி வைத்ததைப் பார்த்த வெண்டல், சிறிதும் தயங்காமல் "டேய் உள்ளே போடா" என்று உரத்த குரலில் சொன்னார். ஜனாதிபதி திடுக்கிட்டு உள்ளே போகத் திரும்பியபோது அவருக்குப் பக்கவாட்டில் ஒரு குண்டு பாய்ந்த சென்றது. ஜனாதிபதி தற்செயலாக உயிர்த்தப்பினார். பிறகு அவர் வெண்டலை அழைத்து அவருடைய கடமை உணர்ச்சிக்கு மெச்சினார். வெண்டல் மரியாதையின்றி பேசியபோதிலும் மன்னித்ததாகவும் கூறினார்.

உள்நாட்டுக் கலகம் முடிந்த பிறகு, வெண்டல் ராணுவத்திலிருந்து நீக்கப்பட்டார். அதே சமயம் அவருக்குக் கலியாணமும் ஆயிற்று ராணுவத்திலிருந்ததற்காகக் கிடைத்த சம்பளத்தைக் கொண்டு அவர் தம் மனைவியுடன்

ஒரு சிறு அறையில் குடும்பம் நடத்தலானார். அவர் விட்டாலும் சட்டப் படிப்பு அவரைவிடவில்லை. அதிலேயே அவருடைய மனம் சென்றதால் அதையே மீண்டும் படிப்பது என்று தீர்மானித்தார்; படித்தும் முடித்தார்.

வருமானந்தான் ஒன்றுமில்லாதிருந்தது. இதனால் மனம் உடைந்து போனார் வெண்டல். ஆனால், அதற்காக அவர் சும்மா இருந்து விடவில்லை. சும்மா இருக்கும் சமயம் அமெரிக்க அரசாங்க சட்டத்தைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்யலானார். ஆராய்ச்சியை எல்லாம் அவர் ஒரு புத்தகமாக எழுதினார். புத்தகம் வெளியாயிற்று, ஆனால் பலன்தான் கிடைக்கவில்லை.

அப்போது அவருக்கு 39 வயது பூர்த்தியாகி இருந்தது. இத்தனை நாட்கள் வரை வாழ்க்கை ஒரு நிலையில் ஸ்திரமாக ஆகாமல், இனி எங்கே ஆகப் போகிறது என்று அவர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவருக்கு சட்டக் கல்லூரியில் பேராசியர் பதவி கிடைத்தது.

பேராசிரியர் வேலையில் அமர்ந்த அவர் சிறிது நாட்களுக்குள்ளாகவே அதைவிட்டுவிட வேண்டியதாயிற்று. முஸ்ஸா செஸ்ட் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தவர் பதவியை ராஜினாமா செய்து விட்டார். அப்பதவிக்கு தகுதியான ஆள் வெண்டல் தான் என்று கவர்னர் தீர்மானித்தார். உடனே அவரை அழைத்து சுப்ரீம்கோர்ட் நீதிபதியாக நியமித்தார்.

இதிலிருந்து அவர் தம் கடமையைச் சரிவரச் செய்ததின் மூலம், அமெரிக்க அரசாங்க சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி வரை பதவி வகித்தார். அவர் தம்முடைய 90 வயது வரை அப்பதவியிலேயே இருந்து வந்தார்.

வெண்டல் நகைச்சுவையாகப் பேசக் கூடியவர். எப்பொழுதும் தத்துவப் புத்தகங்கள், சட்டப் புத்தகங்கள், முதலியவற்றைப் படித்துக் கொண்டே இருப்பார்.

காலஞ்சென்ற ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவருடைய நெருங்கிய நண்பர். அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டதும் தனது சந்தோஷத்தையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்ள வெண்டல் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது வெண்டல் பிளாட்டோவின் தத்துவங்களைப் படித்துக்கொண்டிருந்தாராம். இதைக் கண்ட ரூஸ்வெல்ட் 'இந்த வயதில் ஏிளாட்டோவை ஏன் படிக்கிறீர்கள்?" என்று கேட்டாராம்.

அதற்கு வெண்டல் சிரித்துக்கொண்டே "என் அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக" என்றாராம் அப்போது அவருக்கு வயது 93 !

# 9

## கனவில் கண்ட கடை

'டார்ஜான் கதை' ஆப்பிரிக்கா நாட்டு காடுகளில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. அக்காடுகளைக் கதைக்குப் பக்கபலமாகக் கொண்டதாலேயே அது பிரசித்தி அடைந்தது என்றும் சிலர் சொல்லுகிறார்கள் ஆனால், அக்கதையை எழுதிய எட்கார்ரைஸ்பர்ரோ என்பவர் ஆப்பிரிக்கா தேசத்தையே பார்த்ததில்லை என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கும அல்லவா?

எழுத்தாளர்களிலேயே பர்ரோதான் மிகவும் அதிகமாகச் சம்பாதித்தவர். அவர் தமது எழுபத்தி ஐந்தாவது வயதில் காலமானார். அவர் எழுதிய 'குரங்கு மனிதன்' மூலம் மாத்திரம் அவருக்கு இருபது லட்சம் டாலருக்கு மேல் கிடைத்திருக்கிறது.

மோட்டார் முதல் சாக்லெட் வரை பல சாமான்களை பர்ரோ வியாபாரம் செய்திருக்கிறார். வியாபாரத்தில் எல்லாம் தோல்வி ஏற்படவே அவர் ஒரு கடையில் குமாஸ்தா



வேலையில் அமர்ந்தார். அந்த வேலையும் அவருக்கு சரிபட்டு வரவில்லை. அதனால் அவர் அந்த வேலையையும் விட்டுவிட்டார். இப்படி எல்லாவற்றிலும் அவருக்குத் தோல்வி ஏற்பட்டதால் அவர் மனம் சஞ்சலம் அடைந்தது. இனி என்ன செய்வது என்று சதா அவர் சிந்தித்துக் கொண்டிருக்கலானார்.

பர்ரோவுக்குக் கவலைகள் அதிகமாகவே இரவு நேரங்களில் தூக்கமே வராதாம். அப்படியே கொஞ்சம் தூக்கம் வந்தாலும் கண் மூடிய சிறிது நேரத்திற்கெல்லாம் அவருக்கு பயங்கரக் கனவு ஏற்பட்டுத் தூக்கம் கலைந்துபோய் விடுமாம். கண் விழித்து எழுந்த பர்ரோ தான் கண்ட கனவைப்பற்றி சிந்தித்துக் கொண்டே இரவு முழுவதையும் கழிப்பாராம். அப்படித் தான் வழக்கம் போலவே ஒரு நாள் அவருக்கு தூக்கம் வந்தது கண்ணை மூடினார் சில வினாடிகளே ஆகியிருக்கும். ஒரு பயங்கரக் கனவு கண்டு உடனே எழுந்து விட்டார். இந்தச் சமயம் அவர் கண்ட கனவைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதற்குப்பதிலாக தாம் கண்ட கனவை எப்படிப் பணமாக்குவது என்று யோசித்தார் இரவு முழுவதும் நன்கு யோசித்த பிறகு மறுநாள் காலையில் தாம் கண்ட கனவுகளை கதைகளாக எழுதலானார் அதைப் புத்தகமாகவும் வெளியிட்டார். சொந்தப் பெயரில் அல்லாமல் "நார்மல் பீன்" என்ற புனைப்பெயரிலேயே வெளியிட்டார். கற்பனைக்கும் எட்டாத அக்கட்டுக் கதைகள் முதலில் விலை

போகவே இல்லை. பர்ரோ அப்புத்தகங்களை வீடு வீடாக எடுத்துச் சென்று விற்று வந்தார். இதனால் அவருக்கு உணவிற்கு ஓரளவு நடந்து வந்ததே ஒழிய அதிக லாபம் கிடைக்கவில்லை.

பர்ரோ மேலும் சிந்தித்தார். அச்சமயம் ஸ்டேன்லி என்பவர் எழுதிய "இன் டார்க்கஸ்ட் ஆப்பிரிக்கா" என்ற புத்தகம் வெளி வந்தது. அப் புத்தகத்தை வாங்கிப் படித்த பர்ரோவுக்கு, ஒரு யோசனை தோன்றிற்று, அதன்படியே அவர் "குரங்கு மனித"னை உருவாக்கினார். 1912ம் வருஷம் குரங்கு மனிதனின் அவதாரமான "டார்ஜான் கதை" ஒரு பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தது, அதன் பிறகு, அது புத்தகமாக வெளி வந்ததும் மக்ககளிடையே ஏகப் பரபரப்பை உண்டு பண்ணியது.

மக்கள் டார்ஜான் கதையை விரும்புகிறார்கள் என்பதை அறிந்த சினிமாப்படக் கம்பெனிக்காரர்கள் அதைப் படமாகத் தயாரிக்க முற்பட்டனர். அக்காலத்தில் பேசும்படம் இல்லையாதலால் முதலில் எல்மோர் லிங்கன் என்ற பலசாலியை டார்ஜானாகப் போட்டு படம் தயாரித்தனர். டர்க்கிவந்ததும் அதைத் திரும்பவும் பல நடிகர்களைக் கொண்டு படம் தயாரித்தனர். இதுவரை டார்ஜான் கதை இருபத்தி ஐந்து படங்களாக வெளிவந்திருக்கின்றன. அவை அத்தனையும் குரங்குமனிதன் தொடர்ச்சியாக எழுதப்பட்டவை.

சில காரியங்களைச் செய்ய முற்பட்டால், சில சமயங்களில் அது முற்றுப் பெறாது போய்விடும் அதை ஆரம்பித்து வைத்தவராலேயே கூட அதை முடிக்கவும் முடியாது. இந்த வகையைச் சேர்ந்தது டார்ஜான் கதை! பர்ரோ ஒரு சமயம் டார்ஜான் கதையை இதற்கு மேல் ஒரு வரிகூட என்னால் எழுத முடியாது என்று சொன்னாராம். ஆனால் அவரை அறியாமலேயே டார்ஜான் வளர்ந்து கொண்டே இருக்கிறான்.

ஒரு சமயம் அமெரிக்காவில் விளையாட்டு சாமான்கள், சாக்லெட், சோப், பள்ளிச் சிறுவர்கள் எடுத்துச் செல்லும் பைகள், உடைகள் எல்லாவற்றிற்குமே டார்ஜான் பெயர் வைக்கப்பட்டது.

பயங்கரக் கனவுகள் கண்டு, அதைப் புத்தகமாக எழுதி வெளியிட்டு லட்சக் கணக்காகப் பணம் சம்பாதித்த பர்ரோ தாம் இப்படிப் பணக்காரராக ஆவோம் என்று கனவு கண்டாரா என்பது யாருக்காவது தெரியுமா?

# 10

## "பணத்தை எப்படி செலவழிப்பது" என்று தெரியாதவர்

"பணக்காரராக இருந்து இறப்பதே வெட்கப் பட வேண்டிய விஷயம்" என்று ஒருவர் கருதினால் அவரைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அத்துடன் தம்மிடமுள்ள பணத்தைஎந்த வகையில் செலவு செய்தால் நன்றாக இருக்கும் என்று பொது மக்களிடம் ஆலோசனை கேட்டால் என்ன சொல்வீர்கள்? ஆனால் இப்படிக்கூட யாராவது செய்வார்களா என்று தான் கேட்பார்கள்.

ஆன்ட்ரூ கொரனகி என்ற கோடீஸ்வரர் இறுதிக் காலத்தில் தாம் பணக்காரராக சாக விரும்பவில்லை, அதன் காரணமாக, அவர் பத்திரிகைகளில், தம்மிடமுள்ள பணத்தை எந்த வழியில் செலவு செய்தால் நன்றாக இருக்கும் என்று யோசனை கேட்டு விளம்பரம் செய்திருந்தார். நல்ல யோசனைகளைச் சொல்பவர்களுக்குப் பரிசும் கொடுப்பதாக அறிவித்திருந்தார். இதைக் கண்டு பலர் நகைக்கத்தான்



செய்தார்கள். மற்றபடி யோசனைகூற யாருமே முன்வரவில்லை.

ஆன்ட்ரூ கொரனகியின் பெற்றோர் பணக்காரர்கள் அல்ல. அவருடைய சொந்த ஊர் ஸ்காட்லாந்து. கொரனகியின் தகப்பனார் மிகவும் ஏழை. அவர் சிறு பையனாக இருக்கும் போது அவருடைய தகப்பனார் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினார். தகப்பனாருக்கு மேஜை, ஜன்னல் முதலியவைகளுக்கு அழகான முறையில் துணிகளைத் தயாரிக்கத் தெரியும். அமெரிக்காவில் அவர் மேஜையின் மீது விரிக்கும் துணி, திரைத் துணி, ஜன்னல் துணி முதலியவைகளை அழகான பூ வேலைப்பாடுகளுடன் தயாரித்து வீடு வீடாக சென்று விற்று வந்தார். கொரனகியின் தாயார் பூட்ஸ் தயாரிப்பவர்களிடம் வேலை செய்து வந்தாள். ஒருநாள் வருவாய் இல்லாவிட்டால் குடும்பம் பட்டினி என்ற நிலையிலேயே இருந்து வந்தது. கொரனகிக்கு அப்போது போட்டுக் கொள்ள ஒரே ஒரு உடைதான் இருக்குமாம். அதைத் தினமும் இரவு வேளைகளில் அவருடைய தாயார் துவைத்துப் போடுவாராம். அபபொழுது தெல்லாம் கொரனகி தன் பெற்றோர் படும் கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் விடுவாராம். ஒரு சமயம் அவர் தன் தாயாரிடம் "அம்மா, உங்களை நல்ல நிலைமையில் வைக்கும் வரை நான் கலியாணமே செய்துகொள்ளப் போவதில்லை" என்று கூறினாராம்.

கெரனகி, நான்கு வருஷங்கள் பள்ளியில் படித்து விட்டு, தபால் நிலையத்தில் தந்திச் சேவகனாக வேலையில் அமர்ந்தார். தினம் 18 மணிநேரம் வேலை செய்தார். தந்திச் சேவகன் வேலையிலிருந்து கொண்டே தந்தி அடிக்கும் வேலையையும் கற்றுக் கொண்டார். சிறிது காலத்திலேயே அவர் தந்திக் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். பிறகு மேலதிகாரியாகவும் பதவி உயர்ந்தது. இச்சமயத்தில்தான் அவருக்கு எதிர்பாராத வகையில் 'புதையல்' ஒன்று கிடைத்தது. அதைப் புதையல் என்று சொல்வதே தகும். ஒருநாள், கெரனகி ஒருவேலையாக ரயிலில் பிரயாணம் செய்து கொண்டு இருந்தார். அப்போது அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நபர் ஒரு திட்டத்தை அவரிடம் காட்டினார். ரயில் பெட்டிகளில் பிரயாணிகள் தூங்கும்படியான வசதிகளை ஏற்படுத்தும் திட்டமே அது. சக பிரயாணியின் திட்டம் புரட்சிகரமானதாக இருந்ததால், கெரனகி அத் திட்டத்தை ஒரு விலைகொடுத்து வாங்கிக்கொண்டார் அதை ரயில்வே கம்பெனிக்கு நல்ல லாபத்திற்கு விற்றார். அதிலிருந்து அவருக்கு அதிர்ஷ்டக் காற்று அடிக்கத் தொடங்கியது. அச்சமயத்தில் தான் அமெரிக்காவில் புரட்சி ஏற்பட்டது. அதன் காரணமாக ரயில் சாமான்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. உடனே கெரனகி ரயில் சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவினார். நாளடைவில் வளர்ந்தது. கெரனகி பணக்காரர் ஆகிவிட்டார்

# 11

# உலகம் அதிசயிக்கத்தக்க செயல் புரிந்தவர்

ஒருவர் இளமையில் மந்தமாகவோ, விளையாட்டுத் தனமாகவோ இருப்பதைக் கண்டு அவர்களுடைய பிற்காலத்தைப் பற்றி எவ்விதமாகவும் முடிவு கட்டமுடியாது. ஏதோ சில சமயங்களில்தான் அப்படிப்பட்டவர்கள் பிற்காலத்திலும்கூட இளமையிலிருந்ததைப் போலவே இருப்பார்களே அல்லாமல் எல்லோரும் அப்படியே இருக்கமாட்டார்கள். இதற்கு உதாரணமாக ரேடியோவைக் கண்டு பிடித்த பிரபல விஞ்ஞானி மார்கோனியின் வாழ்க்கையை உதாரணமாகச் சொல்லலாம்.

மார்கோனி சிறுவனாக இருந்த சமயம், அவருக்கு உலகத்தில் உள்ள பலவகைப்பட்டவர்களையும் பார்க்க வேண்டும், அவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டும் என்ற அவா அதிகமாக இருந்தது. ஆனால், பல இடங்களுக்குச் சென்று பலரைப் பார்க்க அவருக்கு வசதிதான் இல்லாமல்



இருந்தது. அதனால் அவர் தாம் இருக்கும் உருக்கு அருகிலிருக்கும் இடங்களுக்கு அடிக்கடி போய் வருவார். இப்படி அவர் வீணே சுற்றி வருவதைக் கண்டு அவருடைய தகப்பனார் மனம்வருந்தினார். பையன் இப்படித் திரிந்து கொண்டிருந்தால் பிற்காலத்தில் எப்படிப் பிழைக்கப் போகிறான் என்று பெரிதும் கவலைப்பட்டார். அதே சமயம் பையனுடைய மனதிலும் ஒரு யோசனை தோன்றியது. பணவசதி இல்லாததால் வெளி நாடுகளுக்குச் செல்ல முடியவில்லை. அங்குள்ளவர்களின் பேச்சைக் கேட்க முடியவில்லையே. ஆனால் ஆசையோ விட்டபாடில்லை. இதற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமே என்று கருதினார். தேசங்களைப் பார்க்காவிட்டாலும் ஒரு நாட்டிலிருப்பவன் வேறு நாட்டிலிருப்பவனுடைய பேச்சையாவது கேட்க வழி கண்டுபிடிக்க முயற்சி செய்தார்.

மின்சாரத்தின் மூலம் ஒரு கருவியைச் செய்து அதன் மூலம் எல்லா நாடுகளிலும் பேசுவதைக் கேட்கலாம் என்று அவர் மனதிற்குத் தோன்றியது அதற்கு இணங்க தம்முடைய ஆராய்ச்சியைத் தொடங்கினார். ஆனால், அவர் ஆராய்ச்சியில் வெற்றி காணும் வரை, தம்முடைய எண்ணம் ஈடேறும் என்று நம்பவே இல்லை. அவருடைய தகப்பனாரும் அவருடைய முயற்சி வீண் என்றே கூறிவந்தார்.

வெகு நாட்களுக்குப்பிறகு, மார்கோனியின் ஆராய்ச்சியில் வெற்றி கிடைத்தது. வெற்றியைக் கண்டதும்

மார்கோனிக்கு, அதைத் தம் வீட்டின் கூரைமீது ஏறிநின்று உரத்த குரலில் எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அவருக்குத் தைரியம்தான் வரவில்லை. மக்கள் அவர் சொல்வதை நம்புவார்களா என்று சந்தேகப் பட்டார். அவர் சந்தேகப்பட்டது போலவே, மக்களும் முதலில் நம்பவில்லை. நிதர்சனமாகக் காட்டிய பிறகே நம்பினர். அப்பொழுதும் கூட மார்கோனியின் தகப்பனாருக்கு தம்முடைய பிள்ளையின் ஆராய்ச்சியின் மீது சந்தேகமே இருந்து வந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மார்கோனி கண்டுபிடித்த ரேடியோ சாதனத்தின் உரிமைகளை 50,000 பவுன்களுக்கு வாங்கிய பிறகே அவருடைய சந்தேகம் தீர்ந்து மகிழ்ச்சி அடைந்தார்.

மார்கோனி தம்முடைய ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள ரேடியோ சாதனத்தை கண்டுபிடித்தார். அதன் மூலம் தகப்பனார் கொண்டிருந்த கவலைகளையும் போக்கினார். ஆனால் ரேடியோவை கண்டுபிடித்த பிறகு அவருக்கு பல அபாயங்கள் தோன்றாமல் இல்லை. ரேடியோ இயங்குவதால் தங்களுடைய உடலில் மின்சாரம் பாய்வதாக பலர் குற்றம்சாட்டி, பயமுறுத்திக் கடிதங்கள் எழுதினார்கள். அதில் ஒரு ஜெர்மானியன் இங்கிலாந்துக்கே வந்து அவரைக் கொல்லப் போவதாகவும் கடிதம் எழுதியிருந்தான். ஆனால், அக்கடிதம் ரகசியப் போலீசாரிடம் ஒப்படைத்தல் மூலம் அவன் பிடிக்கப்பட்டு பின்னர் காவலில் வைக்கப்பட்டான்.

இன்று மார்கோனியால் உலகத்தில் நடக்கும் பல நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் நாம் கேட்கிறோம். அவரைப் புகழ்ந்து பேசுகிறோம். பிற்காலத்தில் மார்கோனி இப்படிப் பிரபலம் அடைவார் என்று அவருடைய தகப்பனாரோ, மற்றும் அவரை இளமையில் கண்டவர்களோ கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள். ஏன், அவரே கூட கற்பனை செய்து பார்த்திருக்கமாட்டார் அல்லவா?

# 12

## விடாமுயற்சியால் வெற்றி பெற்றவர்

சிறுவயதில் ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று தோன்றுவது இயற்கை. பெரியவர்களானதும் அதைச் செய்து முடிப்போமோ என்பது தான் யாரும் சொல்ல முடியாத புதிர் ஆனால், சின்ன வயதில் ஒரு தீர்மானத்திற்கு வந்து அதைச் செய்தும் காட்டியவர் அட்மிரல் ரிச்சர்ட் பையர் என்பவர்.

அட்மிரல் பேரி என்பவர் வட துருவத்திற்கு போக அரும் பாடுபட்டார். அங்கு போக அவர் பட்ட கஷ்டங்களை சொல்லவே இயலாது. இதை வர்ஜீனியா நகரத்தைச் சேர்ந்த சுமார் பன்னிரண்டு வயது உள்ள ரிச்சர்ட் பையர் பத்திரிகைகள் மூலம் படித்தறிந்ததும் அவர் மனதில் ஒரு அசட்டு எண்ணம் உதித்தது. "வட துருவத்தை நான் அடைந்தே தீருவேன்" என்று தீர்மானித்தார். இந்தத் தீர்மானத்தை அவர் 1900ம் வருஷம் தம் குறிப்பில் எழுதி வைத்தார்.


வட துருவம்

தீர்மானத்துடன் அவர் நின்றுவிடவில்லை முதலில் பல இடங்களுக்குச் சென்று பார்க்க வேண்டும் என்று எண்ணினார். அதற்காக கப்பல் படையில் சேர்ந்து நல்ல பயிற்சி ஏற்பட வேண்டும் என்று விரும்பினார். அதற்கு இணங்க அவர் கப்பல் படையில் சேர்ந்து பதினான்கு ஆண்டுகள் பல நாடுகளுக்கும் சென்றுவந்தார். பிறகு ஊர் திரும்பியதும் கல்லூரியில் சேர்ந்தார். கப்பல் படையில் இருந்தால் தன்னால் வட துருவத்திற்குப் போக முடியாது என்பதை உணர்ந்த அவர் அதற்கு ஒரு தந்திரம் செய்தார். கப்பல் படையிலிருந்து விலகிக் கொள்வதற்கு தம்முடைய உடலில் ஏதாவது ஒன்றை ஊனமாக்கிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார். அதன்படியே, கல்லூரியில்நடக்கும் குத்துச் சண்டை, மல்யுத்தம் முதலிய வகுப்புகளில் சேர்ந்து பழகினார். ஒருநாள் வேண்டுமென்றே மல்யுத்தம் செய்யும் போது கால் எலும்பை முறித்துக்கொண்டார். இக்காரணத்தால் அவர் தம்முடைய இருபத்திநான்காவது வயதில் கப்பல் படையிலிருந்து விலக்கப் பட்டார். கப்பல் படையிலிருந்து விடுதலை கிடைத்ததும் விமானம் ஓட்டக் கற்றுக்கொள்ள நினைத்தார் விமானம் ஓட்டுவதற்கு கால்கள் நன்றாக இருக்க வேண்டும். ஒரு கால் ஊனமான அவருக்குப் பயிற்சி அளிக்க மறுத்தனர். ஆனால், பெருத்த முயற்சி செய்து பையர் விமானம் ஓட்ட கற்றுக் கொள்ளும் வசதியைப் பெற்றார். கால் ஊனமான காரணத்தால், அவர் இரண்டு தடவை விமானத்தை வேறு ஒரு விமானத்தின் மீது

மோதிவிட்டார். இதனால் அவர் விமானம் ஓட்டக் கற்றுக்கொண்டும் பலனில்லாமல் இருந்தது. அதனால் அவருக்கு விமானம் ஓட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்க மறுத்தது.

அரசாங்கத்தாரிடம் வெகுவாக வாக்குவாதம் செய்து விமானம் ஓட்ட அனுமதி பெற்றார் பையர். ஆனால், அவர் வெகு நாளைய ஆவலான வடதுருவத்தைக் காணவேண்டும் என்பதற்கு யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. பையர் இதனால் மனம் உடைந்து போய்விடவில்லை. அவர் அரும்பாடுபட்டு சில பணக்காரர்களைக் கண்டு தன் எண்ணத்தைச் சொன்னார். அந்த பணக்காரர்கள் அவருடைய எண்ணத்தை அறிந்து அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

பையர் வடதுருவப் பிரயாணத்தைத் துவக்கினார். மிகவும் கஷ்டப்பட்டு வட துருவத்தை அடைந்தார். அங்கு ஒரு அமெரிக்கக் கொடியை நாட்டிவிட்டுத் திரும்பினார். முதலில் வடதுருவத்தைக் காண வேண்டுமென்றிருந்த அவருக்கு அதைக் கண்ட பிறகு தென் துருவத்தையும் காண வேண்டும்மென்று தோன்றியது. அதனால் உடன் அங்கு செல்லவும் முயற்சி செய்தார் வடதுருவத்தை அடைந்ததுபோல் தென்துருவத்தையும் அடைந்தார். அங்கும் ஒரு அமெரிக்கக் கொடியை நாட்டி வந்தார். அவர் ஊர்திரும்பியதும், முன்னர் விமானம் ஓட்டவே அனுமதி

அளிக்க மறுத்த அரசாங்கமும் உதவியளிக்க மறுத்தவர்களும், அவரை வரவேற்கக் காத்துக் கொண்டிருந்தனர். லட்சக்கணக்கான மக்கள், அவர் வரவை எதிர்நோக்கி இருந்தனர். ரிச்சர்ட் பையருக்கு கிடைத்த வரவேற்பு அமெரிக்காவில் வேறு எவருக்கும் கிடைத்திருக்காது. அமெரிக்க அரசாங்கம் அட்மிரல் பட்டத்தையும் அளித்தது. அட்மிரல் ரிச்சர்ட்தான் முதன் முதலில் வடதுருவத்தையும் தென் துருவத்தையும் கண்டவர். விடாமுயற்சியால் வெற்றி கண்டார் பையர்.

13

# இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை திணறச் செய்தவர்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைப் பற்றி பல கதைகள், நிகழ்ச்சிகள் நகைச்சுவையாக எழுதப்பட்டிருக்கின்றன.

இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் சேர்ப்பதற்காக கம்பெனிக்காரர்கள் பலவாறாகக் கஷ்டப்படுவதாகவும் கதைகளில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு நிகழ்ச்சி இதற்கு மாறாக நடந்திருக்கிறது. ஒருவர் தம்மை இன்ஷ்யூர் செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் எவ்வளவு முயற்சிசெய்தும் எந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியும் அவருடைய கோரிக்கையை ஏற்கவில்லை. இந்தச் சம்பவத்தைப் பார்க்கும்போது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைப் பற்றி எழுதப்பட்டுள்ள நகைச்சுவை கதைகள் எல்லாவற்றையும் இது தோற்கடித்து விட்டதாகவே தோன்றுகிறது.



இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ள முன்வந்தவர் பெயர் கிளைடுபெட்டி. அவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இளைஞராக இருக்கும்போது அவர் தம் மனம்போல் திரிவதில் நாட்டம் கொண்டவர். ஒரு சமயம், சர்க்கஸ் கம்பெனி ஒன்று அவர் இருந்த ஊருக்கு வந்திருந்தது. அந்த சர்க்கஸ் கம்பெனியில் காட்டு மிருகங்களை ஆட்டி வைப்பதைக் கண்டு கிளைடுபெட்டி அதிசயித்தார். அதைப்போல் தாமும் காட்டு மிருகங்களை ஆட்டிவைக்க வேண்டும் என்று எண்ணினார் உடனே வீட்டிற்கு வந்ததும் வீட்டிலிருந்த நாய்களை எல்லாம் ஒன்று சேர்த்து, சர்க்கஸ் வேலைகளைப் பயிற்றுவிப்பதில் முனைந்தார். சில நாட்களிலேயே வீட்டிலிருந்த ஆறு நாய்களும் அவர் சொன்னபடி செய்யலாயிற்று. பிறகு, அவர் அந்தச் சர்க்கஸ் கம்பெனிக்குச் சென்று தம்மைச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அவர் இளைஞராக இருப்பதைக் கண்டு சர்க்கஸ் கம்பெனிக்காரர் அவரை சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டனர். அதேபோல, பல சர்க்கஸ் கம்பெனிகளுக்கும் சென்று வேலை கேட்டார். எல்லாரும் ஒன்றுபோல், அவரைச் சேர்த்துக்கொள்ள மறுத்துக் கொண்டே இருந்தனர். கடைசியாக, ஒரு சர்க்கஸ் கம்பெனியில் அவருக்கு மிருகங்களை அடைத்து வைக்கும் கூண்டுகளைச் சுத்தம் செய்யும் வேலை கிடைத்தது. அவ்வேலையில் இருந்து கொண்டே கிளைடுபெட்டி காட்டுமிருகங்களை ஆட்டிவைக்கும் வேலைகளைக் கற்றுக்கொண்டார்.

கூண்டைச் சுத்தம் செய்யச் சென்ற அதே சர்க்கஸ் கம்பெனியில், அவர் மிருகங்களை ஆட்டி வைப்பவராக நியமனம் பெற்றார். ஆனால், ஏற்கனவே இருந்தவர் களெல்லாம் மெச்சும்படியாக கிளைடுபெட்டி மிருகங்களை ஆட்டி வைக்கலனார். ஒரே சமயத்தில் 40 சிங்கங்கள், 6 புலிகள், சிறுத்தை, ஆடு முதலியவைகளை ஒரே கூண்டில் வைத்துக் கொண்டு ஆட்டிப்படைக்கத் தலைப்பட்டார். அத்துடன் நில்லாமல் சிங்கத்தின் வாயிலும் தன் தலையை விட்டுக் காட்டலானார். இதைக் கண்ணுற்ற பொது மக்களும், மிருகங்களை ஆட்டிவைக்கும் சர்க்கஸ் நிபுணர்களும் திகைத்தனர். கிளைடுபெட்டியின் புகழ் அமெரிக்காவில் மாத்திரமின்றி பல நாடுகளிலும் பரவலாயிற்று.

கிளைடுபெட்டி உயிரைப் பணயமாக வைத்தே சர்க்கஸ் தொழிலை செய்து வந்திருக்கிறார். அவருக்கு மிருகங்களால் அபாயம் ஏற்படாமல் இல்லை. சுமார் 24 தடவை கொடிய மிருகங்களின் வாயிலிருந்து அவர் தப்பியிருக்கிறார். அவர் உடலின் பாகங்களை எல்லாம் மிருகங்கள் கடித்திருக்கின்றன. அவற்றை அவர் பொருட்படுத்தவே இல்லை. மேலும் அவர் மிருகங்களை ஆட்டி வைக்கும்போது ஒரு ஒடிந்த நாற்காலி, சாட்டை, பயமுறுத்துவதற்காக வெடிச்சப்தம் கேட்கும் துப்பாக்கி ஒன்று இவைதான் வைத்துக் கொள்கிறார். இந்த நிலையில்

அவருடைய ஆயுளை இன்ஷ்யூர் செய்துகொள்வது என்றால் எந்தக் கம்பெனிதான் துணிந்துமுன்வரும்?

இந்த இன்ஷ்யூரன்ஸ் விஷயத்தைப்போல் மற்றொன்றும் இருக்கிறது. கிளைடுபெட்டி காட்டு மிருகங்களை ஆட்டிப் படைத்தாலும் அவருக்கு மிகவும் விருப்பமான பிராணி நாய்தான்! அதை சர்க்கஸ் வேலை செய்யச் சொல்வதே அவருக்கு மிகுந்த விருப்பம். சர்க்கஸ் கம்பெனியில் கொடிய மிருகங்களை ஆட்டிப் படைக்கும் கிளைடுபெட்டி வீட்டில் பிரியமான பிராணிகளான நாய்களை வேடிக்கை செய்ய வைக்கிறார். அதில் தான் அவருக்கு மகிழ்ச்சி ஏற்படுவதாகவும் கூறுகிறார்.

14

## துன்பத்திலே இன்பம் காண்பவர்

ஹாவர்ட் தர்ஸ்டன் என்பவர் ஒரு சமயம் நியூயார்க் நகரத்திற்கு போக வேண்டியிருந்தது. அவர் ரயில் நிலையத்துக்கு வந்து டிக்கெட் வாங்கப் போகும் சமயம், ஞாபக மறதியாக ஸிரகாஸ் என்ற இடத்திற்கு வாங்கி விட்டார். இந்தத் தவறு, அவருடைய வாழ்க்கையையே மாற்றிவிட்டது. அவரை பிரபல மாயாஜாலக்காரராக ஆக்கியதும் அந்தத் தவறுதான்.

ஹாவர்ட் தர்ஸ்டன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சிறு பையனாக இருக்கும்போது அவர் வேலைகளைச் சரியாகவே செய்யமாட்டாராம். அதனால் கோபம் கொண்ட தகப்பனார் அவரை நன்றாக அடித்து விடுவாராம். இதனால் சிலசமயம் ஏதாவது தவறு செய்துவிட்டால் அடிக்குப் பயந்து தர்ஸ்டன் சில நாட்களுக்கு எங்காவது ஓடிவிடுவாராம். பையனைக் காணாமல் பெற்றோர் தவித்துக் கொண்டிருப்பார்கள் அந்தச் சமயத்தில் பையன் வந்தால் அடி கிடைக்காமல் இருக்கும்.



ஒரு சமயம் தர்ஸ்டன் வண்டி ஓட்டிக்கொண்டு போயிருந்தார். அப்பொழுது அவருக்கு வயது பத்து தான். அவர் வேகமாகப் போக எண்ணி குதிரைகளை அடித்து ஓட்டினார். அடிதாங்காமல் குதிரைகள் மிரண்டு ஓடின. தர்ஸ்டன் சிறு பையனாதலால் குதிரைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவை ஒரு பெரியமரத்தில் போய் மோதி வண்டியையே உடைத்துவிட்டன. ஆனால், தர்ஸ்டன் தற்செயலாக உயிர்தப்பினார். மேலும் அவரது உடம்பில் ஒரு காயங்கூடப் படவில்லை. வண்டி உடைந்ததும் தர்ஸ்டன் பயந்து எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு, நியூயார்க் நகரத்தை நோக்கி ஓடிவிட்டார்.

நியூயார்க் நகரத்தில் தர்ஸ்டன் கூட்ஸ்களில் சாமான்களைத் திருடியும், பத்திரிகை விற்றும் வயிறு வளர்த்து வந்தார். திருட்டுத் தொழில் செய்ததினாலும், கண்ட கண்ட இடங்களில் தூங்கினதாலும் போலீஸாரால் பலமுறை கைது செய்யப்பட்டிருக்கிறார். சுமார் பன்னிரண்டு முறை சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். அவருக்குப் பதிநேழு வயது அப்போது, அவர் சீட்டுக்கட்டுகளில் தந்திர வேலைகளைச் செய்து வந்தார். வேடிக்கை பார்க்கும் மக்கள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு அவர் வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒரு நாள் மதப்பிரசாரம் நடைபெறும் கூட்டத்திற்கு தர்ஸ்டன் சென்றார். அங்கு நடைபெற்ற பிரசங்கத்தைக் கேட்டதும் அவருக்கு மதத்தில் பற்று ஏற்பட்டது. உடனே

மதப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். அங்கு அவர் பலவற்றைப் படித்து தேர்ந்து டாக்டர் படிப்புப் படிக்க நிச்சயித்தார். ஒரு சமயம், அவர் பென்ஸில்வேனியாவுக்குப் போகக் கிளம்பினார். மத்தியில் ஒரு ரயிலிலிருந்து மறு ரயிலுக்கு மாற வேண்டியதிருந்தது. இச்சமயத்தில் அலெக்ஸாண்டர் ஹெர்மன் என்ற பிரபல மந்திரக்காரர் அங்கு வந்திருக்கிறார். அவர் மந்திரக் காட்சிகளை நடத்தி வருகிறார் என்று தெரிய வந்தது. தர்ஸ்டனுக்கு சிறு வயதிலிருந்தே மந்திர வேலைகளில் ஆசையிருந்தது, அதனால், அவர் சொந்த ஊருக்குப் போகாமல் மந்திரக்காரரைக் காணச் சென்றார். ஆனால் அவரைக் கண்டு பேச தர்ஸ்டனுக்கு தைரியமில்லை, இச்சமயத்தில் மந்திரக்காரர் வாங்கிய இடத்திற்கே தானும் டிக்கட் வாங்கினார். பிறகு மந்திரக்காரருடன் அறிமுகம் ஏற்பட்டது. பிறகு இவரும் பிரபல மந்திரக்காரரானார். டிக்கெட் வாங்குவதில் ஏற்பட்ட இந்தத் தவறு தான் அவரைப் பெரிய மந்திரக்காரராக ஆக்கியது.

வயிறு வளர்ப்பதற்காக திருட்டுத் தொழிலிலிருந்து பல தொழில்களைச் செய்து வந்த தர்ஸ்டன் பிற்காலத்தில் செல்வந்தராக இருந்தார். ஆனால், அவ்வளவு செல்வத்தைச் சம்பாதித்தும் அவருக்கு மனம் திருப்தி அடையவில்லை. தம்முடைய இளமைக் காலத்தில் தாம் துன்பப்பட்டது தான் தமக்கு மகிழ்ச்சிகரமான நாட்கள் என்று அவர் கருதுகிறார்.

## 15

# விரும்பாத கதை வெற்றியைத் தந்தது!

ஒருவர் தாம் எழுதிய கதையிலேயே தம் மதிப்புக்கு அகௌரவம் ஏற்பட்டுவிடும் என்று பயந்தார். பிற்காலத்தில் அக்கதையே உலகப் பிரசித்தம் அடைந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார் என்றால் இதுவே ஒரு சுவாரஸ்யமான கதை அல்லவா?

சுமார் எழுபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் "அற்புதத் தீவில் அலைஸ்" என்ற புத்தகம் வெளிவந்தது. அதன் ஆசிரியர் "லூயிஸ் கரேல்" என்று அதில் குறிப்பிட்டிருந்தது. 'அலைஸ் கதை' நம்பத்தகாத முறையில் கற்பனை போன போக்கில் எழுதப்பட்டிருந்தது. ஆனால், உலகத்து சிறுவர், சிறுமிகளுக்கு அக்கதை மிகவும் பிடித்தமாகி விட்டது. அதனால், அப்புத்தகத்திற்கு பெரிய கிராக்கி ஏற்படலாயிற்று. இதுவரை "அற்புதத் தீவில் அலைஸ்", 169 பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. பதினான்கு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.



"அற்புதத் தீவில் அலைஸ்" என்ற புத்தகத்தை எழுதியவரின் உண்மைப் பெயர் சார்லஸ் எல். டாட்ஸன். அவர் லண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கதைப் பேராசிரியராக இருந்தார். அத்துடன் அவர் ஓய்வு நேரங்களில் மதப் பிரச்சாரமும் செய்து கொண்டிருந்தார்.

ஒரு சமயம் டாட்ஸன், தேம்ஸ் நதியில் ஒரு படகில் போய்க்கொண்டிருந்தார். அவருடன் மூன்று சிறுமிகளும் இருந்தனர். அவர்கள் டாட்ஸனை ஒரு கதை சொல்லும்படி வேண்டிக்கொண்டனர். தேம்ஸ் நதியில் உல்லாசமாப் படகில் போய்க்கொண்டிருந்த அவர் அற்புதமான கதை ஒன்றைச் சொன்னார். அதைக் கேட்ட அச்சிறுமிகள், அதையே ஒரு புத்தகமாக எழுதினால், நன்றாக இருக்கும்; தங்களைப் போன்ற சிறுவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று வேண்டிக்கொண்டனர்.

பேராசிரியர் வீடு திரும்பியதும் அவர் படகில் சொன்ன கதையை எழுதத் தொடங்கினார். கற்பனையில் தோன்றியபடியெல்லாம் அவர் எழுதினார். அன்று அவருடன் வந்த சிறுமிகளில் ஒருத்தியான அலைஸ் என்பவளுடைய பெயரையே அப்புத்தகத்திற்கு தலைப்பாக வைக்க எண்ணினார். அதன் பயனாக அப்புத்தகத்திற்கு "அற்புதத் தீவில் அலைஸ்" என்று தலைப்புக் கிடைத்தது. ஆனால், அக்கதையை அவர் எழுதி முடித்த பிறகு, படித்துப் பார்த்தார். கதையின் போக்குப்படி அலைஸ் எனற சிறுமி தூங்கப்

போகிறாள். பிறகு, ஒரு முயலினுடைய வலையில் இறங்கிப்போய் ஒரு அற்புதத் தீவை அடைகிறாள். அங்கு கண்ட அதிசயங்கள் பல. அதைப் படித்து முடித்த பிறகு, புத்தகமாக வெளியிட அவர் விரும்பவில்லை. அதனால் தம்முடைய மதிப்பே போய்விடும் என்று கருதி, ஒரு மூலையில் அக்கதையின் கையெழுத்துப் பிரதியைப் போட்டுவிட்டார்.

பல வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் ஒரு நண்பர் அவரைக்காணவந்தார். நண்பர் கண்ணில் "அற்புதத் தீவில் அலைஸ்" தென்பட்டது. அதை எடுத்துப் படித்தார். கதைப்போக்கு அவருடய மனதைக் கவர்ந்தது அதனால் அதைப் புத்தகமாக வெளியிட அவர் விரும்பினார். டாட்ஸனோ அதை வெளியிட விரும்பினாலும், தம்முடைய பெயரை உபயோகிக்கக்கூடாது என்று கூறினார் அவர் விருப்பப்படியே லூயிஸ்கரேல் என்ற புனைபெயரில் அப்புத்தகம் வெளியாயிற்று.


மதிப்பே போய்விடும் என்று எண்ணிய டாட்ஸன் பிற்காலத்தில் "அற்புதத் தீவில் அலைஸ்" இவ்வளவு பிரபலமாகும் என்பதைக் கற்பனைகூடச் செய்து பார்த்திருக்க மாட்டார் அல்லவா?

# 16

# கப்பலில் வேலை செய்தவர் கதை எழுதினார்

மூன்றே மாதங்கள் பள்ளிக்குச் சென்ற ஒருவர் பிற்காலத்தில் 51 புத்தகங்கள் எழுதினார் என்றால் நம்புவீர்களா? ஆனால், இது கற்பனை இல்லை. ஜாக்லண்டன் என்பவர் தம்முடைய 19 வயதில் தான் பள்ளிக்கூடத்திற்கே படிக்கச்சென்றார். சுமார் நான்கு வருஷங்கள் படிக்கவேண்டிய பாடங்களை எல்லாம் இரவு பகலாக மூன்றே மாதங்களில் படித்து பரீட்சையிலும் தேறினார். அதன் பிறகு தான் அவர் நாவல் சிறுகதை முதலியவை எழுத ஆரம்பித்தார். 18 வருஷங்களில் அவர் 51 நாவல்களும், எண்ணற்ற சிறுகதைகளும் எழுதியிருக்கிறார்.

ஜாக்லண்டன் சிறு வதிலேயே பள்ளிக்குப் போகாததற்குக் காரணம் அவருடைய குடும்பம் வறுமையில் இருந்ததுதான். குடும்பம் வறுமையால் கஷ்டப்பட்டதால் ஜாக்லண்டன் படிக்காமல் சம்பாதிக்க வேண்டியதாயிற்று.



அதனால் அவர் ரயில் நிலையத்தில் கூலிவேலையிலிருந்து பல தொழில்களைச் செய்தார். கூலி கிடைக்காத நாட்களில் அவர் பட்டினியாகவும் இருந்திருக்கிறார். ஒரு நாள் இப்படித்தான் அவருக்கு கூலி ஏதும் கிடைக்காமல் போயிற்று. அன்று அவருக்கு பசியின் கொடுமையால் களைப்பாக இருந்தது. களைப்பின் மிகுதியால் அவர் ஒரு கூட்ஸ் வண்டியின் அடியில் படுத்துத் தூங்கிவிட்டார். ரயில்வே போலீஸார் அவரைக் கைது செய்து விசாரணைக்கு மாஜிஸ்டிரேட் முன் கொண்டு நிறுத்தினர். தம்முடைய நிலையை அவர் மாஜிஸ்டிரேட்டிடம் கூறியும், அவருக்கு ஒரு மாதச் சிறை தண்டனை கிடைத்தது பெரியவர்களிடம் அடியும், போலீசாரின் தொந்தரவும் அவர் மனதைப் பெரிதும் துன்புறுத்திவிட்டது. அவர் கப்பல் வேலையில் சேர்ந்தார். அவ்வேலையும் அவருக்குப் பிடிக்க வில்லை. ஆனால் கப்பல் வேலையில் சேர்ந்ததின் மூலம் அவருக்குப் புத்தகம் படிக்கும் ஆவல் ஏற்பட்டது நண்பர்களிடம் எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக்கொண்டு, புத்தகங்களைப் படிக்கலானார்.

கப்பல் வேலையைவிட்டு விலகிய ஜாக்லண்டனுக்கு படிப்பின் மீது கவனம் சென்றது. ஆனால், பள்ளிக்குச் சென்று படிப்பதற்கு அவரிடமோ பணம் இல்லை. அதனால், கல்வி அறிவை விருத்தி செய்து கொள்ள இலவச நாடகத்திற்குச் சென்று புத்தகங்களைப் படிக்கலானார். ஒரு நாள், தீரச்செயல்கள் நிரம்பிய புத்தகம் ஒன்றைப் படித்தார்.

மறுநாள் அராபியக் கதையைப் படித்தார். இதிலிருந்து அவருக்கு கதைப் புத்தகம் படிப்பதில் அதிக ஆவல் ஏற்பட்டுவிட்டது. தினமும் அவர் நூலகத்துக்குச் சென்று புத்தகங்களைப் படித்து வந்ததால் அவருடைய கல்வி அறிவு தானாகவே விருத்தி அடைந்தது. மேலும், அவர் கதைப் புத்தகங்தான் படித்தார் என்பதல்ல. அரசியல், பொருளாதாரம் இன்னும் பலவகைப் புத்தகங்களையும் படித்து முடித்தார்.

ஜாக்லண்டனுக்கு 18 வயதாகியபோது கலிபோர்னியா பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். இரவு பகல் என்று பாராமல் படித்து மூன்றே மாதங்களில் பரீட்சையும் எழுதி தேர்வு பெற்றார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் திரும்பவும் கூலி வேலை போன்றவை செய்வதில் அவருடைய மனம் நாட்டம் கொள்ளவில்லை. அதற்கு பதில் இலக்கிய வேலையை அவர் மனம் நாடியது. ஆசை ஏற்பட்டதும் அவர் கதைகள் எழுதத்தொடங்கினார். எழுதிய கதைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பினார். ஆனால், ஒன்று கூட பிரசுரமாகாமலே திரும்பி வந்து கொண்டிருந்தன. இதைக் கொண்டு அவர் மனம் தளர்ந்து விடவில்லை. கடைசியாக ஒருநாள் அவருக்கு நான்கு பவுன் செக் ஒன்று வந்தது. அத்துடன் ஒரு கடிதமும் வந்தது. அவர் எழுதிய 'டைபூன்' என்ற கதை ஸான் பிரான்ஸிஸ்கோ கால் என்ற பத்திரிகையின் சிறுகதைப் போட்டியில் வெற்றி

பெற்றதற்காகவே அப்பணம் அவருக்கு அனுப்பப்பட்டிருந்தது. செக்கையும் குறிப்பையும் கண்டதும், ஜாக்லண்டன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது. அவர் தம்முடைய முயற்சி வெற்றி பெற்றதாகக் கருதினார். அதிலிருந்து தொடர்ந்து சலிக்காமல் கதைகள், நாவல்கள் எழுதத் தொடங்கினார். சுமார் ஐந்து வருஷங்களில் அவர் வாசகர்களால் மிகவும் நேசிக்கும் கதாசிரியராகி விட்டார். அவருடைய வருமானமும் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

ஜாக்லண்டன் இளமையில் வறுமையால் கஷ்டப்பட்டார். சிலர் அவரை வெறுத்து அடித்துத் துரத்தினர். ஆனால், அவர் இலக்கியத் தொழிலை மேற்கொண்டு வெற்றியும் பெற்ற பிறகு, அவரை வாசகர்கள் தங்கள் இலட்சிய புருஷராகக் கொண்டார்கள்.

## 17

# வேடிக்கையான கதாசிரியர்

1835 ம் வருஷம் ஒரு வால் நட்சத்திரம் வானத்தில் தோன்றியது. அம்மாதிரி நட்சத்திரம் 76 வருஷங்களுக்கு ஒரு முறைதான் தோன்றுமாம். வால் நட்சத்திரம் தோன்றிய சமயத்தில் ஒருவர் பூவுலகில் பிறந்தார். அவர் பிறந்தபோது வானத்தில் தோன்றிய வால் நட்சத்திரம் பற்றி பெற்றோர் அடிக்கடி பேசிக்கொள்வார்களாம். இதைக்கேட்டுக் கொண்டிருந்த பையனுடைய மனத்தில் ஒரு எண்ணம் ஏற்பட்டது. அது தீவிரமாகவும் ஆயிற்று பையனுடைய மனதில் தோன்றிய எண்ணம் இதுதான்: தான் 'இறப்பதற்குள் அந்த வால்நட்சத்திரத்தைப் பார்த்து விட வேண்டும் என்பதே'. இதைச் சிறுவன் தன் பெற்றோரிடமும் நண்பர்களிடமும் சொல்லுவானாம். அதைக் கேட்டவர்கள் கைகொட்டி நகைக்கத்தான் செய்தார்களாம் ஆனால், பையன் சொல்லியபடியே தான் நடந்தது. அவன் பிறக்கும் போது தோன்றிய எண்ணம், மரணப் படுக்கையிலிருந்தவாறு வால்நட்சத்திரத்தை பார்த்தபிறகே உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. இது கட்டுக்கதையல்ல. இது மார்க்ட்வைன் என்ற



பிரபல கதாசிரியரின் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவம். இந்த ஒரு சம்பவந்தான் அவர் வாழ்க்கையில் ஆச்சரியமானது என்பதல்ல அவருடைய வாழ்க்கை முழுதும் ஆச்சரியமானது தான்.

மார்க்ட்வைன் ஏழைக் குடும்பத்தில் 1865ம் வருஷம் பிறந்தார். அவருடைய உண்மை பெயர் ஸாமுவேல்ஸாங்கர்ன் கிரிமன்ஸ். அவர் அமெரிக்காவில் மிஸோரி என்ற ஊரைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் ஒரு விவசாயி. மேலும் மார்க்ட்வைனுடன் பிறந்தவர்கள் மூவர். இதனால் அவருடைய தகப்பனார் குடும்பத்தை நடத்தவே மிகவும் கஷ்டப்பட்டார்.

மார்க்ட்வைன் பெரியவனானதும் விளையாடத் தலைப்பட்டார். அவருக்குத் தெரிந்த நகைச்சுவைகளை எல்லாம் நடைமுறையிலேயே செய்ய முற்பட்டார். இதைக் கண்டு பெற்றோர் மனம் வருந்தினர். பையனைப் பள்ளிக்கு அனுப்பினாலாவது திருந்துவான் என்று எண்ணினர். ஆனால், பள்ளியில் சேர்க்கப்பட்டபின்னும் மார்க்ட்வைனுடைய தொல்லை குறையவில்லை. அதற்கு மாறாக விளையாட்டுகள் அதிகமாயிற்று. மார்க்ட்வைனுடைய தாயார் அவரை நல்ல வழிக்குக் கொண்டு வர தன்னாலான முயற்சிகளை எல்லாம் செய்தாள். அவளுடைய எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு மார்க்ட்வைன் படிப்பை நிறுத்திவிட்டு, ஒரு அச்சகத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

இரண்டு வருடங்கள் வரை அவர் அங்கே சம்பளம் இல்லாமலே வேலை செய்தார். பிறகு தான் அவருக்குச் சொற்ப சம்பளம் கொடுத்தனர்.

இச்சமயத்தில்தான் அவருடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான சம்பவம் நடந்தது. தெருவில் போகும்போது அவர் சிறுபிள்ளைத் தனமாக வழியில் கிடக்கும் காகிதங்களைப் பொறுக்குவார். பிறகு அதைச் சுற்றி எறிவார். இப்படித்தான், ஒருநாள் ஒரு காகிதத்துண்டைப் பொறுக்கினார்; அது ஜோன் ஆப் ஆர்க் என்பவருடைய சரித்திரப் புத்தகத்தின் பகுதியைச் சேர்ந்தது. அதைப்படித்ததும் அவருக்கு அப்புத்தகத்தையே படிக்க வேண்டும் என்று தோன்றிற்றாம். இதிலிருந்து தான் அவருக்குப் புத்தகப்படிப்பில் அதிகக் கவனம் செல்லலாயிற்று. அப்படியே கதைகள், கட்டுரைகள் எழுதும் நிலைக்குக் கொண்டுவிட்டது.

மார்க்ட்வைன் நகைச்சுவையாகப் பேசுவார் நகைச்சுவையாக எழுதக்கூடியவர். அவருடைய சொற்பொழிவு என்றால் மக்கள் திரள் திரளாகக் கூடிவிடுவர்.

ஒரு சமயம் மார்க்ட்வைன் பெரிய கடனாளியாகி விட்டார். கடன்காரர்கள் அவரை நிர்ப்பந்தித்த சமயம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடுவதாகவும், மோசம் செய்துவிடமாட்டேன் என்றும் கூறினார். அச்சமயம் அவருக்கு உடல்நிலை மோசமாக

இருந்தது. அப்படியிருந்தும கடனை தீர்ப்பதற்காக புத்தகங்கள் எழுதியும், பிரசங்கங்கள் செய்தும் பணம் சேகரித்தார். அவர் வாக்கு அளித்தபடியே கடன் பூராவையும் கொடுத்தார்.

மார்க்ட்வைன் எதிர்பாராத விதத்தில் எப்படி கதாசிரியரானாரோ அப்படியே அவருடைய கலியாணமும் நடந்தது. ஒரு கப்பலில் அவர் ஒரு பெண்ணின் போட்டோவைக் கண்டார். உடனே அவர் மனதில் அந்தப்பெண்ணின்மீது அன்பு ஏற்பட்டு விட்டது. வெகுநாட்களுக்குப் பிறகு, அதே பெண்ணைக் கண்டு அவர் கலியாணமும் செய்து கொண்டார்.

அவர் வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டிய சுகங்களை எல்லம் குறைவின்றி அனுபவித்தார், ஆனால் அவருக்கு ஒரு குறைமாத்திரம் இருந்து வந்தது. தான் பிறந்த சமயத்தில் தோன்றிய நட்சத்திரம் திரும்பவும் உதிக்கும்போது பார்த்துவிட்டு இறக்க வேண்டும் என்று அவருடைய 76வது வயதில் அவர் மரணப் படுக்கையில் படுத்திருந்தார். அவருடைய சிந்தனையில் தன் ஆவலைப் பற்றியே இருந்து வந்தது. 1910ம் வருடம் ஒரு இரவில் திடீரென்று வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றியது. வான வெளியையே பார்த்திருந்த மார்க்ட்வைன் அதைக்கண்டு புளகாங்கிதம் கொண்டார். உடனே தம் மகளை அழைத்து தனக்குப் பிரியமான நாடோடிப் பாடல் ஒன்றைப் பாடும்படி கூறினார். பாட்டைக் கேட்டுக்கொண்டே அவர் உயிர் துறந்தார்.

# 18

## தாய் கண்ட கனவு மகனால் பலித்தது

மின்டா மார்டின் என்ற மாது 1886ம் வருஷம் ஜனவரி மாதம் 15ம் தேதி ஒரு கனவு கண்டார். அவர் ஆகாயத்தின் ஒரு யந்திரத்தில் பிரயாணம் செய்வது போல் கனவில் கண்டார். கனவு கண்ட பிறகு, இது நடக்குமா? என்று அவர் தன்னையே பலமுறை கேட்டுக் கொணடார். மேலும் அக்காலத்தில் ஆகாய விமானங்களே கிடையாது. இதனால் தான் கண்டது மனப் பிரமையின் மூலம் ஏற்பட்டது தான் என்று எண்ணி சும்மா இருந்து விட்டார். ஆனால், அவர் மன்தில் கனவைப் பற்றிய சிந்தனை மாத்திரம் எப்போதும் நினைவில் இருந்து கொண்டே இருந்தது.

மார்டின் தென்மேற்கு கான்ஸாஸில் வசித்துக் கொண்டிருந்தார். அவருடைய கணவர் சாதாரண அந்தஸ்திலேயே இருந்தார். இதனால் குடும்பம் சாதாரண நிலையிலேயே இருந்தது. இச்சமயத்தில் மார்டின் ஒரு ஆண் குழந்தைக்கு தாயாரானார். குழந்தை வளர்ச்சி பெற்றது.



அதுபோல, மார்டின் மனதிலும் தான் கண்ட கனவும் வளர்ந்து கொண்டே இருந்தது. மார்டின் தன் மகனுடன் கொஞ்சும் போதெல்லாம் தான் கண்ட கனவைப் பற்றியே சொல்லிக் கொண்டிருப்பார். இதனால் பையனுக்கு ஒருவித ஆவல், எற்பட்டிருந்தது.

மார்டினுடைய மகன் கிளின் மார்டின் ஏழுவயது பையனாக இருக்கும்போது ஆகாயத்தில் பட்டம் பறப்பதை வெகு ஆவலுடன் கவனித்து வருவான். பட்டம் ஆகாயத்தில் பறப்பது போல், தன்னாலும் பறக்க முடியுமா என்று எண்ணுவான். அப்பொழுது அவனுடைய தாயார் கண்ட கனவு நினைவிற்கு வரும்.

கிளின் மார்டின் ஒரு சமயம் பட்டம் ஒன்று வாங்க தாயாரிடம் காசு கேட்டான். அச்சமயம் அவனுடைய குடும்பம் வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தது. அதனால் மகன் கேட்டபடி தாயாரால் காசு கொடுக்க இயலவில்லை. தாயார் மிகவும் வருந்தினார் ஆனால், மகன் மனம் தளரவில்லை. காசு கொடுத்து வாங்க முடியாத பட்டத்தைத் தானே செய்து கொள்ளலாம் என்று எண்ணினான். உடனே மூங்கில் கம்புகளையும், காகிதத்தையும் சேகரித்தான் அதைக் கொண்டு பிறர் உதவியின்றி பட்டம் ஒன்றை தயாரித்தான். அவன் செய்த பட்டம், சாதாரணமாக மற்றவர்களுடையதைப்போல் இல்லாமல் புது முறையாக இருந்தது. இதைக்கண்ட பையனுடைய நண்பர்கள்

தங்களுக்கும் அதுபோல் தயார் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். கிளின் மார்டின் இப்படியே சில நாட்களுக்குள் பட்டம் தயாரிப்பதில் நல்ல தேர்ச்சி பெற்றுவிட்டான். ஆனால், அவன் மனமோ அத்துடன் திருப்தி அடைந்துவிடவில்லை. தாயார் கண்ட கனவைப் நினைவாக்கச் செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

கிளின் மார்டின் பெரியவனான பிறகு குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு வேலைக்கு போக வேண்டியவரானார். போர்டு மோட்டார் கம்பெனியிலும் மற்றும் சில கம்பெனிகளிலும் வேலைக்கு அமர்ந்தார். மோட்டார் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்த பிறகு கிளின் மார்டின் மனம் இயந்திர சாதனங்களில் ஈடுபட்டது. இயந்திர சாதனத்தின் மூலம் தரையில் எப்படி பிரயாணம் செய்கிறோமோ, அதே போல் ஆகாயத்திலும் பிரயாணம் செய்யலாம் என்று நம்பிக்கை கொண்டார். அதைக் கொண்டு, அவர் பகல் பூராவும் கம்பெனி வேலை செய்வார். இரவு நேரங்களில் தம்வீட்டில் ஆகாயத்தில் பறக்கும் இயந்திரத்தைப் பற்றிய ஆராய்ச்சி செய்வார். அவருக்கு உதவி செய்ய அவருடைய தாயார் தான் இருந்தார். மகன் தன் கனவை நினைவாக்கச் செய்யப் போகிறான் என்ற எண்ணத்தில் தாயார் பூரிப்படைந்திருந்தார்.

மின்டா மார்டின் கனவு கண்டு சரியாக 17 வருஷங்கள் கழித்து, அது நினைவாயிற்று. அதற்கு சில நாட்கள் முன்பு தான் அமெரிக்காவில் இருவர் விமானத்தைக் கண்டு பிடித்திருந்தனர். அதனால் கிளின் மார்டின் விமானத்தைக் கண்டு பிடித்தது மூன்றாவது மனிதராகக் கருதப்பட்டார்.

ஒரு பட்டம் வாங்கக்கூட காசு இல்லாதிருந்த மார்டின் குடும்பம் பணத்தின்மீதே புரண்டு கொண்டிருக்கிறது. சமையல் அறையை விமானம் தயாரிக்கும் தொழிற்சாலையாக முதலில் உபயோகித்தவர்கள் அமெரிக்காவிலேயே பெரிய விமான தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றனர்.

மின்டா மார்டின் கனவு கண்டபொழுது, அது வாழ்க்கையில் நடக்கும் என்று அவர் எண்ணியே இருக்கமாட்டார். ஆனால் அவர் கண்ட கனவை நினைவாக்கி விட்டார் அவருடைய மகன்.

# 20

## சிறையிலே சிந்தித்து ஆசிரியர் ஆனார்

பிரபலமான ஆங்கில எழுத்தாளர் காலஞ்சென்ற ஒ. ஹென்றி. அந்தக் காலத்தில் அவருடைய பேச்சும் எழுத்தும் ஆங்கில மொழிக்கே ஒரு அணியாகத் திகழ்ந்ததாம்.

ஒரு நாள் அவருடைய நண்பர் பிண்ட்சே டெனிசன் என்பவர் அவரைப்பார்க்க வந்திருந்தார் "அந்த சோபாவில் அப்படியே படுத்துக்கொள். இன்றைக்குச் சாயந்திரத்துக்குள் எப்படியாவது ஒரு கதை எழுதியாக வேண்டும். ஒரு விஷயத்தை மனதிலே நினைத்தேன் ஆனால் பிரத்தியட்ச 'மாடல்' ஒன்று இருந்தால் சௌகரியமாக இருக்கும் உன்னையும் உன் மனைவியைப் பற்றியும் எழுதலாம் என்று நினைக்கிறேன். அவளை நான் பார்த்தது கூட இல்லை. இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் இருவரும் வெகு அன்யோன்யத் தம்பதிகளாயிருக்கிறீர்களே! அந்தச் சோபாவில் அப்படியே படுத்துக்கொள். நடுவில் எதற்கும்



குறுக்கிடாதே” என்று கட்டளையிட்டார், ஓ.ஹென்றி. நண்பரும் அப்படியே செய்தார். மூன்று மணி நேரத்திற்குள் ஒரு கதையை எழுதி முடித்தார்.

ஹென்றியின் உண்மையான பெயர் வில்லியம் சிட்னி போர்டர். 1862ல் கிரீன்ஸ்பரோவில் பிறந்து ஆரோக்கியத்திற்காக 1882ல் டெக்சாஸ் நகரத்திற்குச் சென்றார். ஆரம்ப காலத்தில் டெக்சாசில் ஒரு குமாஸ்தா வேலை பார்த்தார் பின்னர், ஆஸ்டின் நகரத்தில் ஆதல் ஈஸ்டல் என்ற குமரியின் காதலுக்குத் தன்னைப் பலிகொடுத்தார். அவளையே மணந்து கொண்டார். மார்க்கரெட் என்ற பெண் குழந்தை ஒன்றும் அவருக்குப் பிறந்தது.

ஆஸ்டினியில் உள்ள முதல் நேஷனல் பாங்கில் கொடுக்கல் வாங்கல் குமாஸ்தாவாக வேலை பார்த்தார். அதே சமயத்தில் “ரோலிங் ஸ்டோன்” என்ற வாரப் பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

கண்டிப்பில்லாத நிலைமையில் பாங்க் நடந்த அந்தக் காலத்தில், போர்டர் கணக்குத் தணிக்கை செய்யும்போது, நூறு டாலர் துண்டு விழுந்ததைக் கண்டார். சம்பந்தப்பட்ட அந்த ரசீதும் காணப்படவில்லை. கணக்குப் புத்தகத்தில் காணப்பட்ட இந்தத் தகிடுதத்தங்களை அந்த அதிகாரிகளே சரிசெய்து விட்டார்கள்.

போர்டர் பாங்கி வேலையை விட்டு விட்டு, 'போநிட்' பத்திரிகையில் வேலை பார்த்தார். 1896 ம் ஆண்டு ஜுலை மாதத்தில் அவர் சிறந்த பத்திரிகை ஆசிரியர் என்ற பெயர்வளர்ந்து வரும் பொழுது இவருக்கு ஒரு களங்கம் வந்தது ஆஸ்டினில் இவர் வேலை பார்த்தபொழுது, சுமார் 1580 டாலர்களுக்கு மேல் கையாடியிருப்பதாக வழக்குத் தொடுத்து, விசாரணைக்கு நோட்டீஸ் வந்தது. குற்றச்சாட்டுப் பிரகாரம் சுமார் முந்நூறு டாலர் போர்டர் பாங்கியிலிருந்து வெளியே போயிருந்த சமயத்தில் காணாமல் போயிருந்தது.

நேராக ஆஸ்டினுக்குப் போவதற்குப் பதிலாக, மத்திய அமெரிக்காவிற்கு ஓடினார் போர்டர். தம் மனைவியை அங்கு வந்து சேரும்படி சொல்லியிருந்தும், அவள் வந்து சேரவில்லை. சயரோகத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவள் இதற்கு பிறகு கொஞ்ச காலத்தில் இறந்துவிட்டாள்.

பிறகு, போர்டர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத் திரும்பினார். 1898ம் ஆண்டு பிப்ரவரி 17ம் தேதி விசாரணை நடந்து தண்டனை தரப்பட்டது.

வழக்கு சம்பந்தமான விசாரணை நோட்டீஸ் வந்ததுமே, நேராக ஆஸ்டினுக்கு வராமல், மத்திய அமெரிக்காவிற்கு ஓடியதுதான் அவர் மீது பெருத்த சந்தேகத்திற்குக் காரணமாகும். தன்னுடைய வக்கீலுக்கு எந்த விதமான

உதவியும் இவர் செய்யவில்லை. விசாரணை முழுவதிலும் மௌனமே சாதித்தார். சில காலம் கழித்து உண்மை தெரிந்த பிறகு, அந்த ஜுரிகளில் ஒருவர் "ஓ. ஹென்றி நிரபராதி என்பது இப்போது எனக்குத் தெரிந்ததைப் போல், அப்போதே தெரிந்திருந்தால் நான் அவருக்கு எதிராக ஓட் செய்திருக்கவே மாட்டேன்" என்று சொன்னதாக ஹென்றியின் வாழ்க்கைக் குறிப்பில் காணப்படுகிறது.

1898ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமக்கு அளிக்கப்பட்ட தண்டனையை அனுபவிக்க ஆரம்பித்தார். "என்னுடைய வாழ்நாளிலேயே நான் ஒன்றையும் திருடியதே கிடையாது. பாங்கியின் பணத்தை நான் கையாடி விட்டதாக என்னை இங்கே வைத்திருக்கிறார்கள். நான் கொஞ்சம் கூட எடுக்கவே இல்லை அதை எல்லாம் வேறு யாரோ எடுத்துக்கொண்டார்கள்" என்று ஓ.ஹென்றி சொன்னதாகச் சிறை டாக்டர் ஜான் தாமஸ் சொல்லியிருக்கிறார்.

முப்பத்தாறு வயதானவராகச் சிறைக்கோட்டம் நுழைந்த இவர், நாற்பது வயதளவில் வெளியே வந்தபோது கைதேர்ந் எழுத்தாளராக மாறி விட்டார். சிறைச்சாலை அவரை ஒன்றும் செய்யவில்லை. அந்த நாற்புறச் சுவருக்குள்ளும் அடங்கியிருந்த அமைதி இவரது சிந்தனைக்கு நீர் வார்த்து வளர்த்துவிட்டது. இவருடைய சிறு கதைகளுக்கு ஏகக் கிராக்கி ஏற்பட்டது. இவருடைய பெயர் மாறியது சிறைக்

காவலனான ஓரின் ஹென்றியின் பெயரைத் தழுவியே ஓ.ஹென்றி என்று இவர் வைத்துக்கொண்டார். சிறையிலிருந்து வெளியே வந்ததும் அற்புதமான கதைகளை எழுதிக் குவித்தார். அவருடைய புகழ் வளர வளர அவருடைய உடல் நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. 1908ம் ஆண்டு இவர் புகழ் ஏணியின் உச்சியில் இருந்தார். அதே சமயம் துன்பக் கேணியில் அதல பாதாளத்தில் சிக்கி அழுந்தினார். இந்தச்சமயத்தில் இவருக்கு மிக அதிகமாக வருமானம் வந்தும், அதை வைத்துக் காப்பாற்றத் தெரியவில்லை. போதாதற்கு பள்ளிப் பருவ சினேகிதி சாரா கோல்மன் என்பவளையும் கலியாணம் செய்து கொண்டார். அவர் நியூயார்க்கிற்குப் போனவுடன், நிமோனியா அவரைப் பிடித்துக் கொண்டது. 1910ம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் தேதி காலிடோனியா என்ற தம்முடைய வீட்டில் தம் 47வது வயதில் இறந்து போனார்.

ஆளைப் பொருத்தமட்டில் ஓ.ஹென்றி ஆஜானுபாகுவானவர். கட்டுமஸ்தான உடலன்றி நல்ல திரண்ட தோள்கள். எப்போதும் கம்பீரமான ஒரு கவர்ச்சி. ஒரு தடவை தன்னைப் பேட்டி காணவந்தவரிடம்: தன்னைப் பற்றி, "அப்படியானால் என்னை ஒரு திடமான கசாப்புக்கடைக்காரன் என்று சொல்லுங்கள்" என்றாராம். அந்தக் கசாப்புக் கடைக்காரன் தான் எழுத்தாளர்களிலேயே மிகக் கற்பனாசக்தி வாய்ந்தவராக விளங்கினார். இந்தக்

கசாப்புக் கடைக்காரன் சமைத்துத் தந்த விருந்திலே மனித உணர்ச்சிகள் தாண்டவமாடும்; நகைச்சுவை ஊற்றெடுக்கும். 1902லிருந்து 1910 வரை நியூயார்க்கிலிருந்த அந்த எட்டு ஆண்டுகளில் அவர் எழுதியவை 250 சிறு கதைகள் எல்லாவற்றிலுமே இந்த உணர்ச்சிகள் முட்டி மோதி வெளிப்படும். அவ்வளவும் அருமையான உயிருள்ள சிருஷ்டிகள். அவருடைய கதாபாத்திரங்களெல்லாம், திருடர்கள், போலீஸ்காரர்கள், கடைப்பெண்கள், காசாளர்கள், நடிகர்கள், சுருக்கெழுத்தாளர்கள் முதலியவர்கள் தான். "மனிதனின் ஒவ்வொரு உணர்ச்சியையும் ஒவ்வொரு கற்பனைக் கதைக்கும் அஸ்திவாரமாகக் கொள்ளலாம்" என்று அவர் ஒரு முறை சொல்லி யிருக்கிறார்.

"சிறு கதை எழுதுவது எப்படி?" என்று ஒருவர் ஹென்றியிடம் கேட்டாராம். "அதென்ன பிரமாதம்? வெகு சுலபமான விஷயமாயிற்றே. கதையை எப்படி முடிப்பது என்பதை முதலில் தீர்மானித்துக்கொண்டு பிறகு, அந்த முடிவு வருவதற்கு எப்படி அமைக்க வேண்டுமோ அப்படிச் செய்தால் போதும். அவ்வளவுதான்!" என்றாராம்.

சுய முயற்சியால் முன்னேறி
வெற்றிகண்ட பத்தொன்பது
பிரபலமானவர்களின்
கதைகள்.